# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

# நீதி நிருவாகம்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2024 – 2025

### மானியக் கோரிக்கை எண். 3


## எஸ். ரகுபதி
### சட்டத்துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2024

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1-2 |
| 2. | நீதிமன்றங்களின் படிநிலை அமைப்பு | 2-3 |
| 3. | உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் அதன் மதுரைக் கிளை | 3-7 |
| 4. | செலவினங்களின் வகைப்பாடு | 7-8 |
| 5. | நீதிமன்றங்களின் எண்ணிக்கை | 8-11 |
| 6. | புதிய நீதிமன்றங்கள் ஒப்பளித்தல் | 11-13 |
| 7. | உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள், சென்னை | 13-16 |
| 8. | மாவட்ட நீதிமன்றங்கள் | 17-24 |
| 9. | சிறப்பு நீதிமன்றங்கள் | 24-70 |
| 10. | சென்னை உயர்நீதிமன்றம், உயர்நீதிமன்ற மதுரைக் கிளை மற்றும் மாநிலத்தில் உள்ள மாவட்ட நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட | 70-71 |

| வ. எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| | வழக்குகளின் தீர்வு மற்றும் நிலுவை விவரம் | |
| 11. | நீதிமன்ற கட்டடங்கள், நீதிபதிகளின் குடியிருப்புகள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகள் | 71-79 |
| 12. | ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம் | 79-82 |
| 13. | மின்னணு நீதிமன்றம் (e-Courts) | 82-83 |
| 14. | நீதித்துறை முத்திரைத்தாள் மின்னணுமயமாக்கல் | 83-85 |
| 15. | தமிழ் வழியிலான சட்ட இதழ் | 85-86 |
| 16. | நீதித்துறை பயிற்சிக் கழகம் | 86-87 |
| 17. | அரசு தலைமை சொத்தாட்சியர் – பொறுப்பு சொத்தாட்சியர் | 87-90 |
| 18. | தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதி | 90-92 |
| 19. | தமிழ்நாடு வழக்குரைஞர்களின் எழுத்தர்கள் நல நிதி | 92-94 |

| வ. எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 20. | இளம் வழக்குரைஞர் உதவித் தொகை | 94-99 |
| 21. | தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு | 99-118 |
| 22. | குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம் | 119-133 |
| 23. | அரசு வழக்காடல் துறை, உயர்நீதிமன்றம், சென்னை | 133-134 |
| 24. | தமிழ்நாடு இல்லத்தில் இயங்கி வரும் சட்டப்பிரிவு, புதுதில்லி | 135 |
| 25. | மாவட்ட நீதிமன்றங்களில் சட்ட அலுவலர்கள் | 136-137 |
| 26. | சிறப்பு குற்றவியல் வழக்கு நடத்துநர்கள் | 138-139 |
| 27. | உயர்நீதிமன்ற நடவடிக்கைகளில் தமிழ்மொழியை பயன்படுத்துதல் | 140-142 |
| 28. | முடிவுரை | 143-144 |
| 29. | பிற்சேர்க்கை I முதல் V வரை | 145-157 |

# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

# நீதி நிருவாகம்

# மானியக் கோரிக்கை எண். 3

# கொள்கை விளக்கக் குறிப்பு 2024 - 2025

## முன்னுரை

நீதி நிருவாகம் என்பது எந்தவொரு பொதுநல அரசின் முதன்மையான செயல்பாடுகளில் ஒன்றாகும். இந்திய அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைகளின்படி அனைத்து குடிமக்களுக்கும் நீதியை உறுதி செய்வதே அரசின் கொள்கையாகும். அரசின் (State) மூன்று தூண்களில் ஒன்றான இவ்வரசாங்கம் நீதித்துறையின் சுதந்திரத்தைக் காப்பதில் உறுதியாக உள்ளது.

தமிழ்நாட்டில் நீதியை நிலை நாட்டுவதற்கு எப்போதும் அதிக முன்னுரிமை அளிக்கப்படுகிறது. தேவையான இடங்களில் நீதிமன்றங்களை ஏற்படுத்தி, கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நீதிமன்றங்களின் பிற தேவைகளை பூர்த்தி செய்வதன் மூலம் அனைத்து குடிமக்களுக்கும் விரைவான சமூக மற்றும் பொருளாதார நீதியை விரிவுபடுத்துவதில் தமிழ்நாடு அரசு முன்னோடியாக உள்ளது.

## 2. நீதிமன்றங்களின் படிநிலை அமைப்பு

புதுதில்லியிலுள்ள உச்ச நீதிமன்றம், இந்தியாவில் முதன்மை நீதிமன்றமாக உள்ளது. இதன் கட்டுப்பாட்டின் கீழ் மாநிலங்களில் உள்ள அனைத்து உயர்நீதிமன்றங்களும்

செயல்படுகின்றன. இம்மாநிலத்திலுள்ள நீதித்துறையின் படிநிலை அமைப்பு பிற்சேர்க்கை I-ல் இணைக்கப்பட்டுள்ளது.

## 3. உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் அதன் மதுரைக்கிளை

சென்னை உயர்நீதிமன்றம், மாநிலத்தின் உயரிய நீதி அமைப்பு ஆகும். இந்த உயர்நீதிமன்றத்திற்கு அனுமதிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 75. அவற்றுள், 66 நீதிபதிகளைக் கொண்டு தற்போது சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரைக் கிளை செயல்பட்டு வருகிறது. சென்னை உயர்நீதிமன்றம், உரிமையியல் வழக்குகளின் அசல் மனுக்களையும், சிறப்பு

அசல் மனுக்களையும் (special original jurisdiction) விசாரணை செய்யும் அதிகாரத்தையும், உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளின் மேல் முறையீட்டினை விசாரணை செய்யும் அதிகாரத்தையும் பெற்றுள்ளது. சென்னை மாநகர எல்லைக்கு உட்பட்ட உரிமையியல் வழக்குகளில், ரூபாய் ஒரு கோடிக்கு அதிகமான பண மதிப்புள்ள வழக்குகளை விசாரிக்கும் உரிமை (pecuniary jurisdiction) சென்னை உயர்நீதிமன்றத்திடம் உள்ளது.

சென்னை உயர்நீதிமன்றத்தின் முதன்மை ஆயத்தின் அதிகார எல்லைக்குள், பின்வரும் 24 மாவட்டங்கள் உள்ளன:-

| வ. எண் | மாவட்டம் | வ. எண் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | சென்னை | 13. | கிருஷ்ணகிரி |
| 2. | திருவள்ளூர் | 14. | தர்மபுரி |
| 3. | காஞ்சிபுரம் | 15. | சேலம் |
| 4. | வேலூர் | 16. | நாமக்கல் |
| 5. | திருவண்ணாமலை | 17. | ஈரோடு |
| 6. | கடலூர் | 18. | திருப்பூர் |
| 7. | விழுப்புரம் | 19. | கோயம்புத்தூர் |
| 8. | நீலகிரி | 20. | திருவாரூர் |
| 9. | நாகப்பட்டினம் | 21. | அரியலூர் |
| 10. | பெரம்பலூர் | 22. | திருப்பத்தூர் |
| 11. | மயிலாடுதுறை | 23. | இராணிப்பேட்டை |
| 12. | கள்ளக்குறிச்சி | 24. | செங்கல்பட்டு |

**சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையின் அதிகார எல்லைக்குள், பின்வரும் 14 மாவட்டங்கள் உள்ளன:-**

| வ. எண் | மாவட்டம் | வ. எண் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | மதுரை | 8. | இராமநாதபுரம் |
| 2. | திண்டுக்கல் | 9. | விருதுநகர் |
| 3. | புதுக்கோட்டை | 10. | திருநெல்வேலி |
| 4. | தஞ்சாவூர் | 11. | தூத்துக்குடி |
| 5. | திருச்சிராப்பள்ளி | 12. | கன்னியாகுமரி |
| 6. | கரூர் | 13. | தேனி |
| 7. | சிவகங்கை | 14. | தென்காசி |

இம்மாவட்டங்களில் எழும் அசல் வழக்குகளின் அதிகார வரம்பினைத் தவிர்த்து, சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயம் பெற்றுள்ள அனைத்து அதிகாரங்களையும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை கொண்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்ற அதிகார எல்லைக்குள், புதுச்சேரி யூனியன் பகுதி நீதிமன்றங்களும் அடங்கும். புதுச்சேரி யூனியன்

பகுதி தொடர்பான பணிகளைக் கவனிக்கும் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் குறித்த செலவினம் முதற்கண் தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்டு, பின்னர் அச்செலவுத் தொகை புதுச்சேரி அரசிடமிருந்து திரும்பப் பெறப்படுகிறது.

சென்னை உயர்நீதிமன்றம் நீதி வழங்குவதுடன் (dispensing justice), தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி யூனியன் பகுதி உள்ளிட்ட அனைத்து கீழமை நீதிமன்றங்களின் முழு நிருவாகப் பொறுப்பையும் மேற்கொள்கிறது.

## 4. செலவினங்களின் வகைப்பாடு

சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயம் மற்றும் மதுரைக் கிளை ஆகியவை

குறித்த செலவினங்கள், “சாட்டிய செலவினம்” (Charged) எனவும், கீழமை நீதிநிருவாகம் குறித்த செலவினங்கள் “அனுமதிக்கப்பட்ட செலவினம்” (Voted) எனவும் நீதி நிருவாகம்-மானியக் கோரிக்கை எண்.3-ன் கீழ் வகைப்படுத்தப்பட்டு உள்ளன.

2024-2025-ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், ரூ.379.64 கோடி “சாட்டிய செலவினத்திற்கும்”, ரூ.1537.78 கோடி “அனுமதிக்கப்பட்ட செலவினத்திற்கும்”, அனுமதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**5. நீதிமன்றங்களின் எண்ணிக்கை**

இம்மாநிலத்தில், சிறப்பு நீதிமன்றங்களையும் சேர்த்து, மொத்தம் 1357 நீதிமன்றங்கள் தற்போது

இயங்கி வருகின்றன. இவற்றுள், சென்னை மாநகரில் 156 நீதிமன்றங்களும், இதர மாவட்டங்களில் 1205 நீதிமன்றங்களும் இயங்கி வருகின்றன.

சென்னை மாநகரம் மற்றும் இதர மாவட்டங்களில் செயல்பட்டு வரும் நீதிமன்றங்கள் / தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் முறையே பிற்சேர்க்கை–II மற்றும் III-ல் இணைக்கப்பட்டுள்ளன.

ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை, தற்போது பணியிலுள்ள நீதிபதிகள் எண்ணிக்கை மற்றும் காலி பணியிடங்கள் குறித்த விவரங்கள் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன:-

| பதவியின் பெயர் | ஒப்பளிக்கப்-பட்ட பணியிடங்கள் | தற்போது பணியிலுள்ள நீதிபதிகள் எண்ணிக்கை | காலிப் பணியிடங்கள் |
|---|---|---|---|
| மாவட்ட நீதிபதி | 359 | 263 | 96 |
| முதுநிலை உரிமையியல் நீதிபதி | 363 | 279 | 84 |
| உரிமையியல் நீதிபதி | 642 | 488 | 154 |
| மொத்தம் | 1364 | 1030 | 334 |

### 5.1. உரிமையியல் நீதிபதிகள் (இளநிலை) மற்றும் மாவட்ட நீதிபதிகள் (நுழைவு நிலை) தேர்வு செய்தல்

2023-ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட 245 காலிப் பணியிடங்களுக்கு, நேரடி நியமனம் மூலம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 240 நபர்கள் தெரிவு செய்யப்பட்டு, தமிழ்நாடு மாநில நீதித்துறையில்

உரிமையியல் நீதிபதியாக (இளநிலை) நியமிக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, 2023-ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட 50 காலிப் பணியிடங்களுக்கு, நேரடி நியமனம் மூலம் உயர்நீதிமன்றத்தால் 6 நபர்கள் தெரிவு செய்யப்பட்டு, தமிழ்நாடு மாநில நீதித்துறையில் மாவட்ட நீதிபதியாக (நுழைவு நிலை) நியமிக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**6. புதிய நீதிமன்றங்கள் ஒப்பளித்தல்**

2021-2022-ஆம் ஆண்டில், ரூ.42.03 கோடி செலவினத்தில் 29 புதிய நீதிமன்றங்கள் 501 பணியிடங்களுடன் அமைப்பதற்காக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

2022-2023-ஆம் ஆண்டில், ரூ.84.84 கோடி செலவினத்தில், 1021 பணியிடங்களுடன், 29 புதிய நீதிமன்றங்கள் அமைப்பதற்காக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

2023-2024-ஆம் ஆண்டில், ஒரு சிறப்பு நீதிமன்றம் உட்பட கீழ்கண்ட 5 புதிய நீதிமன்றங்கள் அமைப்பதற்காக, தொடரும் மற்றும் தொடரா செலவினத்துடன் கூடிய மொத்த செலவினம் ரூ.7.67 கோடியும், 80 புதிய பணியிடங்களும் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | ஒப்பளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் வகை | நீதிமன்றங்-களின் எண்ணிக்கை | இடம்/மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் | 1 | அரக்கோணம்/ இராணிப்பேட்டை |
| 2. | தனியே ஒரு மாவட்ட உரிமையியல் | 1 | வானூர்/ விழுப்புரம் |

| | | | |
|---|---|---|---|
| | நீதிமன்றம் மற்றும் தனியே ஒரு குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் | | |
| 3. | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் | 1 | திசையன்விளை / திருநெல்வேலி |
| 4. | சார்பு நீதிமன்றம் | 1 | இராஜபாளையம் / விருதுநகர் |
| 5. | கூடுதல் சார்பு நீதிமன்றம் | 1 | செய்யாறு / திருவண்ணாமலை |
| | மொத்தம் | 5 | |

## 7. உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்கள், சென்னை

மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பானது சென்னை மாநகர எல்லை முழுவதையும் கொண்டுள்ளது. வழக்கின் பண மதிப்பினைப் பொறுத்தமட்டில், உதவி

நீதிபதிகள் ரூபாய் பத்து இலட்சம் வரையிலும், முதன்மை நீதிபதி, ரூபாய் பத்து இலட்சத்திற்கு மேல் ரூபாய் ஒரு கோடிக்கு மிகாமலும் வரும் வழக்குகளை விசாரிக்கும் அதிகார வரம்பினைப் பெற்றுள்ளனர். சென்னை மாவட்ட அமர்வு பிரிவிற்கு (Sessions Divison), இந்நீதிமன்றமே அமர்வு நீதிமன்றமாகவும் செயல்பட்டு வருகிறது.

1882-ஆம் ஆண்டின் மாகாண சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் சட்டத்தின் கீழ் வரும் சிறு வழக்குகளையும், 1988-ஆம் ஆண்டின் மோட்டார் வாகனச் சட்டம் தொடர்பான வழக்குகளையும் விசாரிக்கும் அதிகாரங்களை, சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் பெற்றுள்ளன. அதாவது,-

- தலைமை நீதிபதி மற்றும் இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது நீதிமன்றங்களின் நீதிபதிகள், சென்னை மாநகரில் 1988-ஆம் ஆண்டின் மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் எழும் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தினை பெற்றுள்ளனர்.

- ஐந்தாவது மற்றும் ஆறாவது சிறு வழக்குகள் நீதிமன்ற நீதிபதிகள், மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் எழும் வழக்குகளை மட்டும் விசாரிக்கும் தீர்ப்பாயங்களாக செயல்படுகின்றனர்.

- பத்து முதல் பதினாறு வரையுள்ள நீதிமன்றங்களின் நீதிபதிகள், வாடகைக் கட்டுப்பாட்டாளர்களாக (Rent Controllers) செயல்படுகின்றனர்.

- மேலும், தலைமை நீதிபதி மற்றும் ஏழு, எட்டு மற்றும் ஒன்பதாவது நீதிமன்றங்களின் நீதிபதிகள், வாடகைக் கட்டுப்பாடு தொடர்பான மேல் முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளனர்.

சென்னை மாநகரில் 37 பெருநகர குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்கள் தற்போது இயங்கி வருகின்றன. பெருநகர குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்கள் சென்னை மாநகரில் உள்ள குறிப்பிட்ட காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளன.

## 8. மாவட்ட நீதிமன்றங்கள்

இம்மாநிலத்தில், 97 மாவட்ட நீதிமன்றங்கள் (ஏற்கனவே விரைவு நீதிமன்றங்களாக இருந்த 53 கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள் உட்பட) இயங்கி வருகின்றன. வழக்கின் பண மதிப்பைப் பொறுத்தமட்டில் ரூபாய் பத்து இலட்சம் மற்றும் அதற்கு மேல் பண உச்சவரம்பற்ற வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தினை மாவட்ட நீதிபதிகள் பெற்றுள்ளனர்.

மாநில தொழிலாளர் காப்புறுதிச் சட்டம், 1948, எஸ்டேட் ஒழிப்புச் சட்டம், 1948 மற்றும் மோட்டார் வாகனச் சட்டம், 1988 போன்ற சிறப்பு சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிக்கும் சிறப்புத்

தீர்ப்பாயங்களாகவும், மாவட்ட நீதிமன்றங்கள் செயல்படுகின்றன.

மாவட்ட நீதிபதிகள் அவரவர் பகுதிகளுக்கான அமர்வு நீதிமன்ற நீதிபதிகளாகவும் உள்ளனர். இவர்கள் குற்ற வழக்குகளில் மரண தண்டனை உட்பட எந்த தண்டனையினையும் விதிக்க தகுதி பெற்றுள்ளனர். ஆனால், இவர்களால் விதிக்கப்பட்ட மரண தண்டனை உயர்நீதிமன்றத்தால் உறுதிபடுத்தப்பட வேண்டும். இவர்கள் தங்களது மாவட்டங்களில் எழக்கூடிய உரிமையியல் மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தையும், கீழமை நீதிமன்றங்களை ஆய்வு செய்யும் அதிகாரத்தையும் பெற்றுள்ளனர்.

இம்மாநிலத்தில் 39 தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நீதிமன்றங்களின் நிருவாகக் கட்டுப்பாட்டில் அந்தந்த மாவட்ட குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்கள் இயங்குகின்றன. சில வகையான வழக்குகளில், உதவி அமர்வு நீதிபதிக்குரிய அதிகாரங்கள் தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு வழங்கப்பட்டுள்ளன. அந்தந்த மாவட்ட தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர்கள் தங்கள் மாவட்டத்தில் உள்ள குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்களில் ஆய்வினை மேற்கொள்வர். இந்நீதிமன்றங்கள் ஏழாண்டுகளுக்கு மேற்படாத சிறைத் தண்டனையை விதிக்கக்கூடிய குற்ற

வழக்குகளை விசாரிக்கும் தகுதியைப் பெற்றுள்ளன.

இம்மாநிலத்தில், முதுநிலை உரிமையியல் நீதிபதி நிலையில் 177 சார்பு நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. அவை ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேலும் ரூபாய் பத்து இலட்சத்திற்கு மிகாமலும் பணமதிப்பு கொண்ட அனைத்து உரிமையியல் வழக்குகளையும் விசாரிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளன.

மேலும், இந்நீதிமன்றங்கள், உதவி அமர்வு நீதிமன்றங்களாகவும் மற்றும் மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டுக் கேட்புரிமை தீர்ப்பாயங்களாகவும் செயல்படுகின்றன. மேலும், இந்நீதிமன்றங்கள் தங்களது எல்லைக்குட்பட்ட மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களின்

தீர்ப்புரைக்கு எதிராக தொடரப்படும் ரூபாய் ஒரு இலட்சம் வரையிலான பண மதிப்பு கொண்ட மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளன. இந்நீதிமன்றங்கள் உதவி அமர்வு நீதிமன்றங்களாக இயங்கும் பொழுது பத்தாண்டுகளுக்கு மேற்படாத சிறைத் தண்டனையை விதிக்கக்கூடிய குற்ற வழக்குகளை விசாரிக்கும் தகுதியை பெற்றுள்ளன.

இம்மாநிலத்தில், இளநிலை உரிமையியல் நீதிபதி நிலையில் 213 மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. இந்நீதிமன்றங்கள் ரூபாய் ஒரு இலட்சம் வரையிலான பண மதிப்புடைய வழக்குகளை விசாரிக்கும் அதிகார வரம்பைப் பெற்றுள்ளன.

இந்நீதிமன்ற நீதிபதிகள் தங்கள் அதிகார வரம்புக்குட்பட்ட பகுதிகளுக்கு வாடகைக் கட்டுப்பாட்டாளர்களாகவும் செயலாற்றுகின்றனர். மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் ஒவ்வொன்றும் அதற்கென்று வரையறுக்கப்பட்ட அதிகார எல்லையை கொண்டுள்ளன. மேலும், அவை ரூ.20,000/- வரையிலான பண மதிப்பு கொண்ட சிறு வழக்குகளையும் விசாரித்து வருகின்றன.

இம்மாநிலத்தில் ஏறக்குறைய அனைத்து வட்டங்களிலும், மொத்தம் 240 குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்கள் இளநிலை உரிமையியல் நீதிபதி நிலையில் இயங்கி வருகின்றன. இந்நீதிமன்றங்கள் மூன்றாண்டிற்கு மேற்படாத சிறைத் தண்டனையோ அல்லது ரூபாய் பத்தாயிரத்திற்கு

மிகாது அபராதமோ அல்லது இரண்டும் சேர்த்தோ விதிக்கக்கூடிய குற்ற வழக்குகளை மட்டுமே விசாரிக்கும் தகுதியைப் பெற்றுள்ளன.

பொதுமக்கள் தங்கள் வசிப்பிடங்களில் இருந்து உரிமையியல் சார்ந்த வழக்குகளை தொடுக்க வெகுதொலைவிற்கு பயணம் செய்து நீதிமன்றங்களை சென்றடையும் சிரமத்தை குறைப்பதற்காகவும், அடிப்படை நீதிமன்றமே இல்லாத வருவாய் வட்டங்களில் பொதுமக்களின் நன்மைக்காக, மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. இந்நீதிமன்றங்கள் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை விசாரிக்கின்றன. மாநிலத்தில், தற்போது 90 மாவட்ட உரிமையியல்

மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன.

**9. சிறப்பு நீதிமன்றங்கள்**

**9.1. வணிக நீதிமன்றங்கள் (Commercial Courts)**

உரிமையியல் நீதிபதி (முதுநிலை) நிலையில் உள்ள வணிக நீதிமன்றம் மாவட்ட தலைநகரங்களில் தொடுக்கப்படும் வழக்குகளில் ரூபாய் மூன்று இலட்சம் முதல் ரூபாய் இருபத்தைந்து இலட்சம் வரையிலான பண மதிப்பு கொண்ட வணிக வழக்குகளை விசாரிக்கும்.

மாவட்ட நீதிபதி நிலையில் உள்ள வணிக நீதிமன்றம், ரூபாய் இருபத்தைந்து இலட்சத்திற்கு மேற்பட்ட பண மதிப்பு கொண்ட வணிக வழக்குகளை தொடர்புடைய மாவட்ட

எல்லைக்குட்பட்ட வழக்குகளை விசாரிக்கும். மேலும், அவை அந்தந்த மாவட்ட எல்லைக்கு உட்பட்ட உரிமையியல் நீதிபதி (முதுநிலை) நிலையில் உள்ள நீதிமன்றங்களிலிருந்து எழும் மேல்முறையீடுகளை விசாரிக்கும் வணிகவியல் மேல்முறையீட்டு நீதிமன்றங்களாகவும் செயல்படும்.

சென்னையில், மாவட்ட நீதிபதி நிலையிலுள்ள வணிக நீதிமன்றம், ரூபாய் மூன்று இலட்சத்துக்கு குறையாத மற்றும் ரூபாய் ஒரு கோடிக்கு மிகாமல் பண மதிப்பைக் கொண்ட வழக்குகளை விசாரிக்கும் பொருட்டு, சென்னையின் முழு நீதித்துறை மாவட்டத்தையும் அதன் உள்ளூர் வரம்பாகக் கொண்டுள்ளது.

வணிக நீதிமன்றச் சட்டம், 2015-ன் கீழ் தொடுக்கப்படும் வழக்குகளை விசாரிக்க கீழ்காணும் 5 வணிக நீதிமன்றங்கள் செயல்படுகின்றன:-

| மாவட்ட நீதிபதி நிலையில் | சார்பு நீதிபதி (முதுநிலை உரிமையியல் நீதிபதி) நிலையில் |
|---|---|
| சென்னை | -- |
| சேலம் | சேலம் |
| கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் |

மேலும், செங்கல்பட்டில் மாவட்ட நீதிபதி நிலையில் ஒன்றும், உரிமையியல் நீதிபதி (முதுநிலை) நிலையில் மற்றொன்றும் என 2 வணிக நீதிமன்றங்கள் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

## 9.2. தொழிலாளர் நீதிமன்றங்கள்

மாவட்ட நீதிபதி நிலையில் நான்கு தொழிலாளர் நீதிமன்றங்களும், மாநிலம் தழுவிய அதிகார வரம்பைக் கொண்ட மாவட்ட நீதிபதி நிலையில் ஒரு தொழில்துறை தீர்ப்பாயமும் சென்னையில் இயங்கி வருகின்றன. விவரங்கள் பிற்சேர்க்கை-IIஇல் கொடுக்கப்பட்டுள்ளன.

தொழிலாளர் தகராறுகள் மற்றும் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்படும் இழப்பீட்டு மனுக்களை தீர்ப்பதற்கு, சென்னையை தவிர மற்ற இடங்களில் மாவட்ட நீதிபதி நிலையில் உள்ள 13 தொழிலாளர் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. விவரங்கள் பிற்சேர்க்கை-IIIஇல் கொடுக்கப்பட்டுள்ளன.

### 9.3. இனக்கலவரங்கள் தொடர்பான வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம்

தென்மாவட்டங்களில் நிகழும் இனக் கலவரம் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென, மாவட்ட நீதிபதி நிலையில் மதுரையில் ஓர் அமர்வு நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.

### 9.4. 1955-ஆம் ஆண்டின் குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்

குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1955-ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிக்க, கீழ்காணும் நான்கு சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன:-

| வ. எண். | நீதிமன்றத்தின் பெயர் | நீதிமன்றத்தின் அதிகார வரம்பு |
|---|---|---|
| 1. | கூடுதல் அமர்வு நீதிமன்றம்-I, திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி |
| 2. | கூடுதல் அமர்வு நீதிமன்றம்-I, தஞ்சாவூர் | i) தஞ்சாவூர்<br>ii) திருவாரூர் |
| 3. | கூடுதல் அமர்வு நீதிமன்றம்-II, திருநெல்வேலி | i) திருநெல்வேலி<br>ii) கன்னியாகுமரி |
| 4. | கூடுதல் அமர்வு நீதிமன்றம்-III, மதுரை | மதுரை |

இதர மாவட்டங்களை பொறுத்தமட்டில், குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1955-ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிக்க சம்பந்தப்பட்ட முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள் அதிகாரம் பெற்றுள்ளன.

## 9.5. 1989-ஆம் ஆண்டின் பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்

பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம், 1989-ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை மட்டும் விசாரிப்பதற்கென, கீழ்காணும் 16 மாவட்டங்களில் சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன:-

| வ. எண் | மாவட்டம் | வ. எண் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | விழுப்புரம் | 4. | இராமநாதபுரம் |
| 2. | சிவகங்கை | 5. | விருதுநகர் மாவட்டம் @ ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 3. | திண்டுக்கல் | 6. | புதுக்கோட்டை |

| | | | |
|---|---|---|---|
| 7. | நாமக்கல் | 12. | தூத்துக்குடி |
| 8. | கோயம்புத்தூர் | 13. | வேலூர் |
| 9. | தேனி | 14. | கடலூர் |
| 10. | திருவண்ணாமலை | 15. | திருப்பூர் |
| 11. | பெரம்பலூர் | 16. | சேலம் |

இதர மாவட்டங்களை பொறுத்தமட்டில், பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம், 1989-ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிக்க சம்பந்தப்பட்ட முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள் அதிகாரம் பெற்றுள்ளன.

1989-ஆம் ஆண்டைய பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கென,

மாவட்ட நீதிபதி நிலையில் அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ள செங்கல்பட்டு, திருவாரூர் மற்றும் கன்னியாகுமரி @ நாகர்கோயில் ஆகிய மூன்று சிறப்பு நீதிமன்றங்கள் துவங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 9.6. குடும்பநல நீதிமன்றங்கள்

சென்னையில் மாவட்ட நீதிபதி நிலையில் 8 குடும்பநல நீதிமன்றங்கள், திருமணம் மற்றும் குடும்ப விவகாரங்கள் தொடர்பான வழக்குகளில் இணக்கத்தை மேம்படுத்தவும், அவ்வழக்குகளை விரைந்து முடிக்கவும் 1984-ஆம் ஆண்டின் குடும்பநல நீதிமன்றங்கள் சட்டத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றன. இவ்விவரங்கள் பிற்சேர்க்கை-IIஇல் கொடுக்கப்பட்டுள்ளன.

மாவட்ட நீதிபதி நிலையில் 11 விரைவு நீதிமன்றங்களும், மாவட்ட நீதிபதி நிலையில் 32 குடும்பநல நீதிமன்றங்களும் சென்னையை தவிர மற்ற இடங்களில் செயல்பட்டு வருகின்றன. விவரங்கள் பிற்சேர்க்கை-IIIஇல் கொடுக்கப்பட்டுள்ளன.

### 9.7. விரைவு நீதிமன்றங்கள்

இம்மாநிலத்தில் உள்ள குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள குற்ற வழக்குகளை தீர்ப்பதற்காக மாநிலத்தில் 40 விரைவு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| மாவட்டம் | விரைவு நீதிமன்றங்-களின் இடம் மற்றும் எண்ணிக்கை | மாவட்டம் | விரைவு நீதிமன்றங்-களின் இடம் மற்றும் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சென்னை (1981-ஆம் ஆண்டின் மாற்றுரிமை ஆவணச் சட்டத்தின் கீழான வழக்குகளை மட்டும் விசாரிப்பதற்கென ஒரு விரைவு நீதிமன்றம் உட்பட) | எழும்பூர்–1<br>சைதாப்-பேட்டை–2<br>ஜார்ஜ் டவுண்–1 | விழுப்புரம் | கள்ளக்-குறிச்சி–1 |
| காஞ்சிபுரம் | ஆலந்தூர்–1 | தேனி | தேனி–1<br>உத்தம-பாளையம்–1 |
| திருவள்ளூர் | பூந்தமல்லி–1<br>திருவள்ளூர்–1<br>அம்பத்தூர்–1 | கரூர் | கரூர்–1 |
| வேலூர் | வேலூர்–1 | தஞ்சாவூர் | தஞ்சாவூர்–1<br>பட்டுக்-கோட்டை–1 |
| கிருஷ்ணகிரி | ஒசூர்–1 | திருவாரூர் | திருத்துறைப்-பூண்டி–1 |
| தருமபுரி | தருமபுரி–1 | நாகப்பட்டினம் | நாகப்-பட்டினம்–1<br>மயிலாடு-துறை–1 |
| சேலம் | ஆத்தூர்–1<br>ஓமலூர்–1 | சிவகங்கை | காரைக்குடி–1 |

| | | | |
|---|---|---|---|
| நாமக்கல் | திருச்-<br>செங்கோடு–1 | விருதுநகர் | ஸ்ரீவில்லி-<br>புத்தூர்–1 |
| ஈரோடு | ஈரோடு–2 | மதுரை | மதுரை–2 |
| திருப்பூர் | திருப்பூர்–1 | திண்டுக்கல் | பழனி–1 |
| கோயம்புத்தூர் | கோயம்புத்தூர்–2 | திருநெல்வேலி | திருநெல்-<br>வேலி–1 |
| நீலகிரி | குன்னூர்–1 | தூத்துக்குடி | தூத்துக்குடி–1<br>கோவில்பட்டி-1 |
| திருவண்ணா-<br>மலை | திருவண்ணா-<br>மலை–1 | கன்னியாகுமரி | நாகர்கோயில்–1<br>இரணியல்–1 |

## 9.8. மகிளா நீதிமன்றங்கள் (மகளிர் நீதிமன்றம்), விரைவு மகிளா நீதிமன்றங்கள் மற்றும் கூடுதல் மகிளா நீதிமன்றங்கள்

"பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்கள்" தொடர்பான வழக்குகளை மட்டும் விசாரிப்பதற்கென, 10 மகிளா நீதிமன்றங்கள் (மகளிர் நீதிமன்றங்கள்) மற்றும் 22 விரைவு மகிளா நீதிமன்றங்கள், மாவட்ட நீதிபதி நிலையிலும், 32 கூடுதல் மகிளா நீதிமன்றங்கள், குற்றவியல் நீதித்துறை நடுவர் நிலையிலும்

இம்மாநிலத்தில் கீழ்கண்ட இடங்களில் செயல்பட்டு வருகின்றன:-

| மாவட்ட நீதிபதி நிலையில் | | குற்றவியல் நீதித்துறை நடுவர் நிலையில் | |
|---|---|---|---|
| சென்னை | புதுக்கோட்டை | சென்னை | புதுக்கோட்டை |
| அரியலூர் | இராமநாதபுரம் | செங்கல்பட்டு (2) | இராமநாதபுரம் |
| கோயம்புத்தூர் | சேலம் | அரியலூர் | சேலம் |
| கடலூர் | சிவகங்கை | கோயம்புத்தூர் | சிவகங்கை |
| தருமபுரி | தஞ்சாவூர் | கடலூர் | தஞ்சாவூர் |
| திண்டுக்கல் | தேனி | தருமபுரி | தேனி |
| ஈரோடு | தூத்துக்குடி | திண்டுக்கல் | திருச்சிராப்பள்ளி |
| காஞ்சிபுரம் | திருச்சிராப்பள்ளி | ஈரோடு | திருநெல்வேலி |
| கன்னியாகுமரி | திருநெல்வேலி | கன்னியாகுமரி | திருப்பூர் |
| கரூர் | திருப்பூர் | கரூர் | திருவள்ளூர் |
| கிருஷ்ணகிரி | திருவள்ளூர் | கிருஷ்ணகிரி | திருவண்ணா-மலை |
| மதுரை | திருவண்ணா-மலை | மதுரை | திருவாரூர் |
| நாகப்பட்டினம் | திருவாரூர் | நாகப்பட்டினம் | வேலூர் |
| நாமக்கல் | வேலூர் | நாமக்கல் | விழுப்புரம் |
| நீலகிரி | விழுப்புரம் | நீலகிரி | விருதுநகர் |
| பெரம்பலூர் | விருதுநகர் | பெரம்பலூர் | |

குற்றவியல் நீதித்துறை நடுவர் நிலையில் அரசால் தூத்துக்குடிக்கு ஒப்பளிக்கப்பட்ட கூடுதல் மகிளா நீதிமன்றத்தை துவங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 9.9. பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் (போக்சோ) சட்டம், 2012-ன் கீழ் செயல்படும் சிறப்பு நீதிமன்றங்கள்

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் (போக்சோ) சட்டம், 2012-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை மட்டும் விசாரிப்பதற்கென, மாவட்ட நீதிபதி நிலையில் உள்ள சிறப்பு நீதிமன்றங்கள் பின்வரும் 19 மாவட்டங்களில் செயல்படுகின்றன:-

| வ. எண் | மாவட்டம் | வ. எண் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | சென்னை | 11. | சிவகங்கை |
| 2. | கோயம்புத்தூர் | 12. | தஞ்சாவூர் |
| 3. | கடலூர் | 13. | திருநெல்வேலி |
| 4. | செங்கல்பட்டு | 14. | திருவண்ணாமலை |
| 5. | கன்னியாகுமரி @ நாகர்கோயில் | 15. | தூத்துக்குடி |
| 6. | மதுரை | 16. | வேலூர் |
| 7. | நாகப்பட்டினம் | 17. | விழுப்புரம் |
| 8. | சேலம் | 18. | விருதுநகர் @ ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 9. | திண்டுக்கல் | 19. | தேனி |
| 10. | தருமபுரி | | |

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் (போக்சோ) சட்டம், 2012-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை, பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்காக பதிவு செய்யப்படும் வழக்குகளுடன் சேர்த்து விசாரிப்பதற்கென பின்வரும் மாவட்டங்களில், 3 மகிளா

நீதிமன்றங்கள் மற்றும் 9 மகளிர் விரைவு நீதிமன்றங்கள் மாவட்ட நீதிபதி நிலையில், சிறப்பு நீதிமன்றங்களாக நியமிக்கப்பட்டுள்ளன:-

| மகிளா நீதிமன்றம் | விரைவு மகிளா நீதிமன்றம் |
|---|---|
| பெரம்பலூர் | அரியலூர் |
| புதுக்கோட்டை | ஈரோடு |
| திருச்சிராப்பள்ளி | கரூர் |
| | கிருஷ்ணகிரி |
| | நாமக்கல் |
| | இராமநாதபுரம் |
| | திருப்பூர் |
| | திருவாரூர் |
| | நீலகிரி |

குழந்தைகள் மீதான பாலியல் குற்றங்களிலிருந்து பாதுகாக்கும் (போக்சோ)

சட்டம், 2012-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்காக பதிவு செய்யப்படும் வழக்குகளுடன் சேர்த்து விசாரிப்பதற்கென, பின்வரும் மாவட்டங்களில், மாவட்ட நீதிபதி நிலையில் உள்ள 7 மகிளா நீதிமன்றங்கள் மற்றும் 13 மகளிர் விரைவு நீதிமன்றங்கள், கூடுதல் சிறப்பு நீதிமன்றங்களாக நியமிக்கப்பட்டுள்ளன:-

| மகிளா நீதிமன்றம் | விரைவு மகிளா நீதிமன்றம் |
|---|---|
| கோயம்புத்தூர் | தருமபுரி |
| கடலூர் | திண்டுக்கல் |
| காஞ்சிபுரம் | நாகப்பட்டினம் |
| மதுரை | தஞ்சாவூர் |
| சேலம் | தூத்துக்குடி |

| | |
|---|---|
| திருநெல்வேலி | திருவண்ணாமலை |
| சென்னை | திருவள்ளூர் |
| | வேலூர் |
| | விழுப்புரம் |
| | விருதுநகர் |
| | தேனி |
| | சிவகங்கை |
| | கன்னியாகுமரி |

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் (போக்சோ) சட்டம், 2012-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை மட்டும் விசாரிப்பதற்கென, திருவள்ளூர் மாவட்டத்திற்கு அரசால் ஒப்பளிக்கப்பட்ட ஒரு சிறப்பு நீதிமன்றத்தை துவங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 9.10. 2005-ஆம் ஆண்டின் குடும்ப வன்முறை சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம்

குடும்ப வன்முறை சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கென, குற்றவியல் நீதித்துறை நடுவர் நிலையில் ஒரு சிறப்பு நீதிமன்றம் கோயம்புத்தூரில் செயல்பட்டு வருகிறது.

## 9.11. பொருளாதார குற்ற வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்

பொருளாதார குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென, சென்னையில் 2 சிறப்பு நீதிமன்றங்களும், மதுரையில் ஒரு சிறப்பு நீதிமன்றமும் என 3 சிறப்பு நீதிமன்றங்கள் கீழ்கண்டவாறு செயல்பட்டு வருகின்றன:-

| மாவட்ட நீதிபதி நிலை, சென்னை | சார்பு நீதிபதி (முதுநிலை உரிமையியல் நீதிபதி) நிலை, மதுரை |
|---|---|
| கூடுதல் தலைமை பெருநகர நீதித்துறை நடுவர், பொருளாதார குற்றங்கள்-I, சென்னை | கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், மதுரை |
| கூடுதல் தலைமை பெருநகர நீதித்துறை நடுவர், பொருளாதார குற்றங்கள்-II, சென்னை | --- |

## 9.12. போலி முத்திரைத்தாள் மற்றும் கள்ள நோட்டு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்

போலி முத்திரைத்தாள் மற்றும் கள்ள நோட்டுகள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென, முதுநிலை உரிமையியல் நீதிபதி நிலையில் (பெருநகர நீதித்துறை நடுவர்)

சென்னையில் ஒரு சிறப்பு நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.

### 9.13. 1997-ஆம் ஆண்டின் தமிழ்நாடு வைப்பீட்டுதாரர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்

தமிழ்நாடு வைப்பீட்டுதாரர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்டம், 1997-ன் கீழ் பதிவு செய்யப்படும் குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென, மாவட்ட நீதிபதி நிலையில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தலா ஒரு சிறப்பு நீதிமன்றம் வீதம் மூன்று சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

### 9.14. 1955-ஆம் ஆண்டின் அத்தியாவசியப் பொருட்கள் சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்

அத்தியாவசியப் பொருட்கள் சட்டம், 1955-ன் கீழ் பதிவாகும் வழக்குகளை விசாரிக்க, மாவட்ட நீதிபதி நிலையில் கீழ்காணும் இடங்களில் சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன:-

| வ. எண் | மாவட்டம் | வ. எண் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | சென்னை | 4. | புதுக்கோட்டை |
| 2. | மதுரை | 5. | சேலம் |
| 3. | கோயம்புத்தூர் | 6. | தஞ்சாவூர் |

### 9.15. மத்திய குற்றப்புலனாய்வுத் துறையின் (Central Bureau of Investigation) வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்

மாநிலத்தில் மத்திய குற்றப் புலனாய்வு துறையின் வழக்குகளை மட்டும்

விசாரிப்பதற்கென, மாவட்ட நீதிபதி நிலையில் 8 சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றுள், சென்னையில் 6 நீதிமன்றங்களும், மதுரை மற்றும் கோயம்புத்தூரில் தலா ஒரு நீதிமன்றமும் உள்ளன.

இவற்றுள், வங்கிகள் மற்றும் நிதி நிறுவன மோசடி தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென ஒரு சிறப்பு நீதிமன்றம் சென்னையில் செயல்பட்டு வருகிறது.

### 9.16. 1978-ஆம் ஆண்டின் பரிசுச் சீட்டு மற்றும் பணச்சுழற்சி திட்ட (தடை) சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம்

1978-ஆம் ஆண்டைய பரிசுச் சீட்டு மற்றும் பணச்சுழற்சி திட்ட (தடை) சட்டத்தின் கீழ் பதிவு

செய்யப்பட்ட குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை (Crime Branch, C.I.D.) குற்ற வழக்கு எண்.3876/2009-ஐ விசாரிப்பதற்கென, முதுநிலை உரிமையியல் நீதிபதி நிலையில் சென்னையில் ஒரு சிறப்பு நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.

### 9.17. 1988-ஆம் ஆண்டின் ஊழல் தடுப்புச் சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்

1988-ஆம் ஆண்டைய ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் (மத்தியச் சட்டம் 49/1988) பதிவு செய்யப்படும் வழக்குகளை மட்டும் விசாரிப்பதற்கென, முதுநிலை உரிமையியல் நீதிபதி நிலையில் கீழ்காணும் இடங்களில் 8 சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன:-

| வ. எண். | மாவட்டம் | வ. எண். | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | சென்னை | 5. | விழுப்புரம் |
| 2. | மதுரை | 6. | சேலம் |
| 3. | கோயம்புத்தூர் | 7. | சிவகங்கை |
| 4. | திருச்சிராப்பள்ளி | 8. | திருநெல்வேலி |

### 9.18. சென்னை பெருநகர மத்திய குற்றப்பிரிவு மற்றும் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம்

மத்திய குற்றப்பிரிவால் பதிவு செய்யப்படும் மோசடி வழக்குகள் மற்றும் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் (Crime Branch, C.I.D.) துறையின் சென்னை மாநகர வழக்குகளை மட்டும் விசாரணை செய்வதற்காக, ஒரு சிறப்பு நீதிமன்றம் முதுநிலை உரிமையியல் நீதிபதி நிலையில் அமைக்கப்பட்டு உள்ளது.

மேலும், சென்னை பெருநகர காவல் ஆணையரக மத்திய குற்றப் பிரிவு வழக்குகளை மட்டும் விசாரிப்பதற்கென உரிமையியல் நீதிபதி நிலையில், ஒரு கூடுதல் நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

### 9.19. சந்தனக்கட்டை / வனக் குற்றங்கள் தொடர்பான குற்ற வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம்

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூரில் சந்தனக்கட்டை தொடர்பான குற்ற வழக்குகளை விசாரிப்பதற்கென ஒரு சிறப்பு குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது. மேலும், கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் வனக் குற்றங்கள் (Forest Offences) தொடர்பான வழக்குகளை

விசாரிப்பதற்கென, முதுநிலை உரிமையியல் நீதிபதி நிலையில் ஒரு சிறப்பு நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.

### 9.20. 1985-ஆம் ஆண்டின் போதை மருந்துகள் மற்றும் மன மயக்க பொருட்கள் சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்

போதை மருந்துகள் மற்றும் மன மயக்க பொருட்கள் சட்டம், 1985-ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை மட்டும் விசாரிப்பதற்கென, மாவட்ட நீதிபதி நிலையில், சென்னை மற்றும் மதுரை ஆகிய இடங்களில் தலா இரண்டு சிறப்பு நீதிமன்றங்கள் மற்றும் விழுப்புரத்தில் ஒரு சிறப்பு நீதிமன்றம் என

மொத்தம் 5 சிறப்பு நீதிமன்றங்கள் கீழ்காணும் இடங்களில் செயல்பட்டு வருகின்றன:-

| நீதிமன்ற அமைவிடம் | நீதிமன்றத்தின் எண்ணிக்கை |
|---|---|
| சென்னை | 2 |
| மதுரை | 2 |
| விழுப்புரம் | 1 |
| மொத்தம் | 5 |

மேலும், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர் ஆகிய 6 மாவட்டங்களில் மாவட்ட நீதிபதி நிலையில் செயல்பட்டு வரும் அத்தியாவசியப் பொருட்கள் சட்ட வழக்குகளுக்காக நியமிக்கப்பட்ட (designated) சிறப்பு நீதிமன்றங்களுக்கு, 1985-ஆம் ஆண்டின் போதை மருந்துகள் மற்றும் மன மயக்க பொருட்கள் சட்ட வழக்குகளையும்

விசாரிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது, கீழே விவரிக்கப்பட்டுள்ளது:-

| நீதிமன்ற அமைவிடம் | நீதிமன்றத்தின் எண்ணிக்கை |
|---|---|
| சென்னை | 1 |
| மதுரை | 1 |
| கோயம்புத்தூர் | 1 |
| புதுக்கோட்டை | 1 |
| சேலம் | 1 |
| தஞ்சாவூர் | 1 |
| மொத்தம் | 6 |

### 9.21. 1987-ஆம் ஆண்டின் பயங்கரவாத மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் (தடுப்பு) சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள்

சென்னையில், பயங்கரவாத மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம், 1987-ன் (தற்போது நீக்கப்பட்டது) (repealed)) கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரிப்பதற்கு

மாவட்ட நீதிபதி நிலையில் இரண்டு சிறப்பு நீதிமன்றங்கள் (முதலாவது மற்றும் ஐந்தாவது கூடுதல் நீதிபதி) செயல்பட்டு வருகின்றன.

### 9.22. குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரிப்பதற்கென சிறப்பு நீதிமன்றங்கள்

சென்னை மற்றும் கோயம்புத்தூரில், குண்டு வெடிப்பு வழக்குகளை மட்டும் விசாரணை செய்வதற்காக இரண்டு சிறப்பு நீதிமன்றங்கள் மாவட்ட நீதிபதி நிலையில் செயல்பட்டு வருகின்றன.

சென்னை பூவிருந்தவல்லியில் குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரணை செய்வதற்காக செயல்பட்டு வரும் சிறப்பு நீதிமன்றம் பொடா சட்டம், 2002 (மத்தியச் சட்டம் 15/2002)-ன் (தற்போது நீக்கப்பட்டது) கீழ் வரும்

குற்றங்கள் தொடர்பான வழக்குகளையும் விசாரணை செய்கிறது.

**9.23. சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1957-ன் கீழான வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம்**

சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1957-ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கென, மாவட்ட நீதிபதி நிலையில் ஒரு சிறப்பு நீதிமன்றம் மதுரையில் செயல்படுகிறது.

**9.24. சட்டமன்ற மற்றும்** நாடா**ளுமன்ற உறுப்பினர்கள் மீதான குற்றவியல் வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம்**

தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மீதான குற்றவியல்

வழக்குகளை விசாரிப்பதற்கென கீழ்கண்ட மூன்று சிறப்பு நீதிமன்றங்கள் சென்னையில் செயல்படுகின்றன:-

| மாவட்ட நீதிபதி நிலையில் சிறப்பு நீதிமன்றம் செயல்படும் இடம் | நீதிமன்றத்தின் எண்ணிக்கை | முதுநிலை உரிமையியல் நீதிபதி நிலையில் சிறப்பு நீதிமன்றம் செயல்படும் இடம் | நீதிமன்றத்தின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சென்னை | 2 | சென்னை | 1 |

(i) பட்டியலிடப்பட்ட சாதிகள் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (கொடுமைகள் தடுப்பு) சட்டம், 1989, (ii) பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாத்தல் சட்டம் (போக்சோ), 2012 (iii) பெண்களுக்கு எதிரான குற்ற வழக்குகளின் விசாரணை,

(iv) ஊழல் தடுப்புச் சட்டம், 1988, (v) வகுப்புவாத மோதல்கள் தொடர்பான வழக்குகள், (vi) குண்டுவெடிப்பு வழக்குகள், அத்துடன் சிறப்பு சட்டங்களின் கீழான வழக்குகள் மத்திய சட்டங்கள் மற்றும் மாநில சட்டங்களின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மீது பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிக்கும் பொருட்டு, மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு அமர்வு பிரிவிலும் உள்ள முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள் / மாவட்ட நீதிமன்றங்களை சிறப்பு நீதிமன்றங்களாக நியமித்து, அனைத்து குற்ற வழக்குகளையும் விசாரிக்க முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதிகள் / மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதிகளை

அந்தந்த சிறப்பு நீதிமன்ற நீதிபதிகளாக அரசு நியமித்துள்ளது.

நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மீதான அமர்வு நீதிமன்ற வழக்குகள் உட்பட்ட அனைத்து குற்ற வழக்குகள் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் வரம்பிற்குட்பட்ட ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதியக்கூடிய வழக்குகளை விசாரிப்பதற்கென, சென்னையில் உதவி அமர்வு நீதிபதி (முதுநிலை உரிமையியல் நீதிபதி நிலை) நிலையில், ஒரு கூடுதல் சிறப்பு நீதிமன்றத்தை அரசு தோற்றுவித்துள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற மற்றும் மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் மீதான குற்றவியல் வழக்குகளை விரைந்து விசாரித்து

முடிப்பதற்காக, குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிபதி தலைமையிலான குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்கள் சிறப்பு நீதிமன்றங்களாக அரசால் தோற்றுவிக்கப்பட்டு, கீழ்காணும் மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன:-

| மாவட்டத்தின் பெயர் | நீதிமன்றத்தின் பெயர் | நடுவர்கள் கோட்டத்தின் பெயர் |
|---|---|---|
| அரியலூர் | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, அரியலூர் | அரியலூர் |
| கோயம்புத்தூர் | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் |
| கடலூர் | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, கடலூர் | கடலூர் |
| தருமபுரி | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, தருமபுரி | தருமபுரி |

| | | |
|---|---|---|
| திண்டுக்கல் | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, திண்டுக்கல் | திண்டுக்கல் |
| ஈரோடு | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, ஈரோடு | ஈரோடு |
| காஞ்சிபுரம் | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, செங்கல்பட்டு | செங்கல்பட்டு |
| கன்னியாகுமரி | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, நாகர்கோயில் | நாகர்கோயில் |
| கரூர் | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, கரூர் | கரூர் |
| கிருஷ்ணகிரி | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி |
| மதுரை | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, மதுரை | மதுரை |
| நாகப்பட்டினம் | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் |
| நாமக்கல் | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, நாமக்கல் | நாமக்கல் |

| | | |
|---|---|---|
| நீலகிரி | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், உதகமண்டலம் | உதகமண்டலம் |
| பெரம்பலூர் | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர் | பெரம்பலூர் |
| புதுக்கோட்டை | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, புதுக்கோட்டை | புதுக்கோட்டை |
| இராமநாதபுரம் | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, இராமநாதபுரம் | இராமநாதபுரம் |
| சேலம் | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, சேலம் | சேலம் |
| சிவகங்கை | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, சிவகங்கை | சிவகங்கை |
| தஞ்சாவூர் | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| தேனி | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, தேனி | தேனி |
| தூத்துக்குடி | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, தூத்துக்குடி | தூத்துக்குடி |

| | | |
|---|---|---|
| திருச்சிராப்பள்ளி | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி |
| திருநெல்வேலி | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, திருநெல்வேலி | திருநெல்வேலி |
| திருப்பூர் | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, திருப்பூர் | திருப்பூர் |
| திருவள்ளூர் | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, திருவள்ளூர் | திருவள்ளூர் |
| திருவண்ணா-மலை | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, திருவண்ணாமலை | திருவண்ணா-மலை |
| திருவாரூர் | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர் | திருவாரூர் |
| வேலூர் | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I. வேலூர் | வேலூர் |
| விழுப்புரம் | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, விழுப்புரம் | விழுப்புரம் |
| விருதுநகர் | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்.II, ஸ்ரீவில்லிபுத்தூர் | ஸ்ரீவில்லிபுத்தூர் |

### 9.25.நிலஎடுப்பு அசல் வழக்குகளை விசாரிப்பதற்காக சிறப்பு நீதிமன்றங்கள்

நில எடுப்பு அசல் வழக்குகளை விசாரிப்பதற்கென, முதுநிலை உரிமையியல் நீதிபதி நிலையில் ஆறு சிறப்பு நீதிமன்றங்கள் பின்வரும் இடங்களில் செயல்பட்டு வருகின்றன:-

| வ. எண் | மாவட்டம் | வ. எண் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | அரியலூர்-2 | 4. | வேலூர்-1 |
| 2. | கடலூர்-1 | 5. | திருவள்ளூர்-1 |
| 3. | இராணிப்பேட்டை-1 | | |

### 9.26. 1881-ஆம் ஆண்டின் மாற்றுரிமை ஆவணச் சட்டத்திற்கான சிறப்பு நீதிமன்றம்

1881-ஆம் ஆண்டின் மாற்றுரிமை ஆவணச் சட்டத்தின் கீழான வழக்குகளை மட்டும்

விசாரிப்பதற்கென, குற்றவியல் நீதித்துறை நடுவர் நிலையில் ஒரு சிறப்பு நீதிமன்றம் திருநெல்வேலியில் செயல்பட்டு வருகிறது.

மேலும், 1881-ஆம் ஆண்டின் மாற்றுரிமை ஆவணச் சட்டத்தின் கீழான வழக்குகளை மட்டும் விசாரிப்பதற்கென குற்றவியல் நீதித்துறை நடுவர் நிலையில், ஒரு விரைவு நீதிமன்றம் சென்னை சைதாப்பேட்டையில் செயல்பட்டு வருகிறது.

### 9.27. சிலை கடத்தல் வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம்

மாவட்ட நீதிபதி நிலையில் உள்ள சென்னை முதன்மை பெருநகர குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மதுரை மற்றும் கும்பகோணத்தில் முதுநிலை உரிமையியல் நீதிபதி நிலையில் உள்ள கூடுதல் தலைமை

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்கள் ஆகியவை, சிலை திருட்டு தொடர்பாக குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973-ன் கீழ் குற்றப்பிரிவு, குற்றப் புலனாய்வு பிரிவு காவல் நிலையங்களில் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கென சிறப்பு நீதிமன்றங்களாக நியமிக்கப்பட்டு, கீழ்கண்ட மாவட்டங்களை அதிகார எல்லைகளாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன:-

| சிறப்பு நீதிமன்றமாக நியமிக்கப்பட்ட நீதிமன்றத்தின் பெயர் | நீதிமன்றத்தின் அதிகார வரம்பு | | |
|---|---|---|---|
| முதன்மைப் பெருநகர நீதித்துறை நடுவர் நீதிமன்றம். சென்னை | சென்னை | தருமபுரி | கள்ளக்குறிச்சி |
| | செங்கல்பட்டு | சேலம் | கடலூர் |
| | காஞ்சிபுரம் | நாமக்கல் | பெரம்பலூர் |
| | திருவள்ளூர் | ஈரோடு | அரியலூர் |
| | வேலூர் | திருப்பூர் | நாகப்பட்டினம் |
| | ராணிப்பேட்டை | கோயம்புத்தூர் | மயிலாடுதுறை |
| | திருப்பத்தூர் | திருவண்ணாமலை | திருவாரூர் |
| | கிருஷ்ணகிரி | விழுப்புரம் | நீலகிரி |

| | | | |
|---|---|---|---|
| கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மதுரை | திருச்சிராப்பள்ளி | விருதுநகர் | தூத்துக்குடி |
| | கரூர் | இராமநாதபுரம் | தென்காசி |
| | திண்டுக்கல் | புதுக்கோட்டை | கன்னியாகுமரி |
| | தேனி | சிவகங்கை | |
| | மதுரை | திருநெல்வேலி | |
| கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம் | தஞ்சாவூர் | | |

## 9.28. மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கேட்புரிமை வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம்

**மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கேட்புரிமை அசல் மனு தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென, இம்மாநிலத்தில் 34 சிறப்பு நீதிமன்றங்கள் கீழ்கண்டவாறு செயல்படுகின்றன:-**

| மாவட்ட நீதிபதி நிலையில் | | முதுநிலை உரிமையியல் நீதிபதி நிலையில் | |
|---|---|---|---|
| சென்னை (2) | கடலூர் (2) | கோயம்புத்தூர் (1) | கடலூர் (1) |
| தருமபுரி (1) | ஈரோடு (1) | தருமபுரி (1) | திண்டுக்கல் (1) |
| கிருஷ்ணகிரி (1) | மதுரை (1) | ஈரோடு (1) | கிருஷ்ணகிரி (1) |
| சேலம் (1) | தஞ்சாவூர் (1) | மதுரை (1) | சேலம் (2) |
| திருச்சிராப்பள்ளி (2) | திருப்பூர் (2) | தஞ்சாவூர் (1) | திருச்சிராப்பள்ளி (1) |
| திருவள்ளூர் (1) | விழுப்புரம் (1) | திருநெல்வேலி (1) | திருப்பத்தூர் (1) |
| -- | -- | திருவள்ளூர் (1) | திருவண்ணாமலை (1) |
| -- | -- | விழுப்புரம் (3) | -- |

## 9.29. 1988, மோட்டார் வாகனச் சட்டம் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென நடமாடும் நீதிமன்றங்கள்

1988-ஆம் ஆண்டின் மோட்டார் வாகனச் சட்டத்தின் (மத்திய சட்டம் 59/1988) கீழ் பதிவு

செய்யப்படும் சிறு வழக்குகள் மற்றும் இதர சட்டங்களின் கீழான வழக்குகளை விசாரிப்பதற்கென 14 நடமாடும் நீதிமன்றங்கள் கீழ்காணும் இடங்களில் செயல்பட்டு வருகின்றன:-

| மாவட்ட நீதிபதி நிலையில் | | முதுநிலை உரிமையியல் நீதிபதி நிலையில் | |
|---|---|---|---|
| பெருநகர நீதித்துறை நடுவர்கள் / முதுநிலை உரிமையியல் நீதிபதி நிலையில் நடமாடும் நீதிமன்றங்கள் செயல்படும் இடம் | நீதிமன்றங்-களின் எண்ணிக்கை | உரிமையியல் நீதிபதி / குற்றவியல் நீதித்துறை நடுவர் நிலையில் நடமாடும் நீதிமன்றங்கள் செயல்படும் இடம் | நீதிமன்றங்-களின் எண்ணிக்கை |
| சென்னை | 4 | 1. காஞ்சிபுரம் | 1 |
| | | 2. விழுப்புரம் | 1 |
| | | 3.கோயம்புத்தூர் | 1 |
| | | 4.திருச்சிராப்பள்ளி | 1 |
| | | 5. மதுரை | 1 |
| | | 6. நாமக்கல் | 1 |

| | | |
|---|---|---|
| | 7. சேலம் | 1 |
| | 8. ஈரோடு | 1 |
| | 9. திண்டுக்கல் | 1 |
| | 10. திருநெல்வேலி | 1 |

## 9.30. நடமாடும் நீதிமன்றங்கள் மூலம் போக்குவரத்து விதிமீறல் செலுத்துச் சீட்டு (Challan) வழக்குகளை தீர்ப்பது

சென்னை மாவட்டத்தில் உள்ள XXI மற்றும் XXII பெருநகர குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்கள் மெய்நிகர் (Virtual) முறையில் நடமாடும் நீதிமன்றங்களாக செயல்படுகின்றன. மேலும், 1,62,126 போக்குவரத்து விதிமீறல் வழக்குகள் மெய்நிகர் முறையில் தீர்க்கப்பட்டுள்ளன. அபராதத் தொகை ரூ.88,16,08,290/- மின்னணு பரிவர்த்தனை மூலமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

## 9.31. கூடுதல் மாஸ்டர் நீதிமன்றங்கள்

சென்னை நகரில் 10 கூடுதல் மாஸ்டர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றுள், சென்னை உயர் நீதிமன்றத்திற்காக நான்கு நீதிமன்றங்களும், சென்னை நகர உரிமையியல் நீதிமன்றத்திற்கு நான்கு நீதிமன்றங்களும், சென்னை சிறு வழக்கு நீதிமன்றத்திற்கு இரண்டு நீதிமன்றங்களும் இயங்கி வருகின்றன.

ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதிகள் அல்லது ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற பதிவாளர் ஆகியோர் சென்னை உயர்நீதிமன்றத்தில் உள்ள கூடுதல் மாஸ்டர் நீதிமன்றங்களில் நியமிக்கப்படுகிறார்கள். எஞ்சியுள்ள கூடுதல்

மாஸ்டர் நீதிமன்றங்களில் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதிகள் நியமிக்கப்படுகிறார்கள்.

இந்த நீதிமன்றங்கள் அசல் வழக்குகளில் வழக்காடிகளுக்கு அழைப்பாணை அனுப்பி, அவர்களின் சாட்சியங்களை பதிவு செய்து, தொடர்புடைய நீதிமன்றங்களுக்கு, தொடர் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கின்றன.

## 10. சென்னை உயர்நீதிமன்றம், உயர் நீதிமன்ற மதுரைக் கிளை மற்றும் மாநிலத்தில் உள்ள மாவட்ட நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் தீர்வு மற்றும் நிலுவை விவரம்

சென்னை உயர்நீதிமன்றம், உயர் நீதிமன்ற மதுரைக் கிளை, மற்றும் மாநிலத்தில் உள்ள மாவட்ட நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் தீர்வு மற்றும்

நிலுவை விவரம் பிற்சேர்க்கை-IVல் கொடுக்கப்பட்டுள்ளது.

**11. நீதிமன்றக் கட்டடங்கள், நீதிபதிகளின் குடியிருப்புகள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகள்**

2021-2022ஆம் ஆண்டில், ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகளுக்காக, அரசு ரூ.201 கோடி நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

2022-2023-ஆம் ஆண்டில், மேற்காணும் பணிகளுக்காக அரசு ரூ.442.02 கோடி நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

2023-24-ஆம் ஆண்டில், ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள், நீதிபதிகளுக்கான

குடியிருப்புகள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகளுக்காக. அரசு ரூ.87.88 கோடி நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | செங்கல்பட்டில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டட வளாகத்தில் உள்ள மாவட்ட சட்டப் பணிகள் ஆணைய கட்டடத்தின் முதல் தளம் மற்றும் வணிக நீதிமன்றங்கள் அமைப்பதற்கான கூடுதல் கட்டடத்தின் தரைத் தளம் புதுப்பித்தல். | 1.45 |
| 2. | திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் உள்ள கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்ற கட்டடத்திற்கு 8 பேர் பயணிக்கும் வசதியுடன் கூடிய மின்தூக்கி ஏற்படுத்துதல். | 0.44 |
| 3. | சேலம் மாவட்டம் மேட்டூர், நாமக்கல் மாவட்டத்தில் ராசிபுரம் மற்றும் திருச்செங்கோடு, தஞ்சாவூர் | 1.67 |

| | | |
|---|---|---|
| | மாவட்டத்தில் பட்டுக்கோட்டை மற்றும் திருவையாறு ஆகிய இடங்களில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்களுக்கு மின்தூக்கி வசதி ஏற்படுத்துதல். | |
| 4. | சென்னை உயர்நீதிமன்றத்தின் பல்வேறு பிரிவுகளுக்கு இடமளிக்கும் வகையில் புதிய ஒன்பது மாடிக் கட்டடம் கட்ட திருத்திய நிர்வாக அனுமதி அளித்தல். | 1.77 |
| 5. | சென்னை உயர்நீதிமன்றத்தில் தற்போதுள்ள நீதிபதிகள் அறையில் நான்காவது மாடியில் புதியதாக கட்டப்பட்டுள்ள கருத்தரங்க அறைக்கு வசதிகள் ஏற்படுத்துதல். | 3.77 |
| 6. | திருப்பூர் மாநகரில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்திற்கு மின் வசதிகளை வழங்குதல். | 0.59 |
| 7. | அம்பத்தூரில் வாகன நிறுத்துமிடம் மற்றும் நீதிபதிகள் குடியிருப்புகளுடன் கூடிய ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம் கட்ட இரண்டாவது திருத்திய நிர்வாக அனுமதி வழங்குதல். | 0.42 |

| | | |
|---|---|---|
| 8. | சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வளாகத்தில், நீதிபதிகளுக்கான 8 அடுக்குமாடி வகை பங்களாக்கள் கட்டுதல் மற்றும் நீதிபதிகளுக்கான அடுக்குமாடி வகை பங்களாக்களுக்கு கூடுதல் வசதிகள் ஏற்படுத்துதல். | 7.88 |
| 9. | சென்னை, பசுமைவழிச் சாலையில் (Greenways Road) உள்ள மல்லிகை வளாகத்தில் உள்ள சென்னை உயர்நீதிமன்ற விருந்தினர் மாளிகையில் தரைத்தள அறைகள், ஓய்வறை, உணவருந்தும் அறை மற்றும் முதல் மாடி தொகுதி ஆகியவற்றை புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்பு செய்தல். | 2.63 |
| 11. | தருமபுரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்-II ஆகியவை இயங்கிவரும் பாரம்பரியக் கட்டடங்களை பாதுகாக்கவும் மற்றும் மறுசீரமைக்கவும் திருத்திய நிர்வாக அனுமதி வழங்குதல். | 0.24 |
| 12. | ஆத்தூரில் உள்ள கூடுதல் மாவட்ட நீதிமன்றம், குற்றவியல் நீதித்துறை | 0.29 |

| | | |
|---|---|---|
| | நடுவர் (விரைவு நீதிமன்றம்) நீதிமன்றம், குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்கள்-I & II ஆகியவற்றிற்கு சேலம் மாவட்டத்தில் தற்போதுள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்தில் இயங்கும் வசதியை வழங்குதல். | |
| 13. | மதுரையில் உள்ள சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வளாகத்தில் உள்ள மாண்புமிகு நீதிபதிகள் பங்களாக்களைப் பராமரிப்பதற்கான நிதியினை ஆண்டுக்கு ரூ.61,59,000/-லிருந்து ரூ.2,24,00,000/-ஆக உயர்த்தி வழங்குதல். | 1.62 |
| 14. | சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள பழைய சட்டக் கல்லூரி வளாகத்தில் 5 மாடிக் கட்டடம் கட்டுதல். | 38.55 |
| 15. | உச்சநீதிமன்றத்தின் மாண்புமிகு நீதிபதிகள் மற்றும் இந்தியாவில் உள்ள மற்ற உயர்நீதிமன்றங்களின் மாண்புமிகு நீதிபதிகளின் பயன்பாட்டிற்காக சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையின் | 17.60 |

| | | |
|---|---|---|
| | வளாகத்தில் உள்ள மிக முக்கிய நபர் மற்றும் மிக மிக முக்கிய நபர்களுக்கான விருந்தினர் மாளிகை கட்டுதல். | |
| 16. | மேட்டூரில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டட வளாகத்தில் பொது கழிப்பறை மற்றும் வாகன நிறுத்துமிடம் ஏற்படுத்தி கொடுத்தல். | 0.17 |
| 17. | திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள திருவள்ளூர் மற்றும் பூவிருந்தவல்லியில் உள்ள மாவட்ட நீதிமன்ற கட்டடத்தில் உள்ள பல்வேறு நீதிமன்ற அரங்குகள் மற்றும் அறைகளில் குளிரூட்டி வசதி ஏற்படுத்துதல். | 1.10 |
| 18. | நாகப்பட்டினம் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்தின் தற்போதைய கட்டுமானப் பணிகளுக்கு கூடுதல் வசதிகளை வழங்குதல். | 6.48 |
| 19. | கிருஷ்ணகிரி ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்தில் நீதிமன்ற அரங்குகள் உட்பட பாதிக்கப்படக் கூடிய சாட்சிகள் மற்றும் குழந்தை சாட்சிகளை விசாரிக்கும் மையம் கட்ட திருத்திய நிர்வாக அனுமதி அளித்தல். | 0.05 |

| | | |
|---|---|---|
| 20. | நாமக்கல்லில் உள்ள பெருந்திட்ட வளாகத்தில் உள்ள நீதிபதிகள் குடியிருப்பு மற்றும் திருச்செங்கோட்டில் உள்ள நீதிபதிகள் குடியிருப்புகளில் சிறப்பு பழுதுபார்ப்பு பணிகளை மேற்கொள்ளுதல். | 0.34 |
| 21. | கிருஷ்ணகிரியில் கூடுதல் சிறப்பு நீதிபதி மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.II குடியிருப்பு வளாகத்தில் இரண்டு ஒற்றை வாகன நிறுத்துமிடம் கட்டுதல். | 0.15 |
| 22. | லட்சுமிபுரத்தில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்தில் பாதிக்கப்படக்கூடிய சாட்சிகள் மற்றும் குழந்தை சாட்சிகளை விசாரிக்கும் மையம் கட்ட திருத்திய நிர்வாக அனுமதி வழங்குதல். | 0.12 |
| 23. | மொடக்குறிச்சி தாலுக்கா, எழுமாத்தூர் ஊராட்சியில் உள்ள மகளிர் சுயஉதவிக்குழு கட்டடத்தில் அமையவுள்ள புதியதாக ஒப்பளிப்பு செய்யப்பட்ட எழுமாத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் | 0.55 |

| | | |
|---|---|---|
| | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்துதல். | |
| | மொத்தம் | 87.88 |

சொந்த கட்டடங்கள், அரசு வாடகை கட்டடங்கள் மற்றும் வாடகை கட்டடங்கள் ஆகியவற்றில் செயல்பட்டு வரும் நீதிமன்றங்களின் விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | நீதிமன்ற கட்டடங்களின் வகைகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சொந்தக் கட்டடம் | 1056 |
| 2. | அரசு வாடகை கட்டடம் | 117 |
| 3. | தனியார் வாடகை கட்டடம் | 66 |
| | மொத்தம் | 1239 |

சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் கீழமை நீதிமன்றங்களுக்கு உட்கட்டமைப்பு மற்றும்

இதர வசதிகளின் தேவைக்கேற்ப, அவ்வப்போது அரசு நிதி ஒப்பளிப்பு செய்து வருகிறது.

### 12. ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்

ஒன்றிய அரசின் நீதித்துறையானது, நீதிமன்றங்களின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, “ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்” (Centrally Sponsored Scheme) என்ற திட்டத்தினை மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு நிதி உதவி அளித்து, செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டம், கீழமை நீதிமன்றங்களுக்கான கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள், வழக்குரைஞர் அறைகள், கணினி அறை

மற்றும் கழிவறைகள் கட்டுவதன் மூலம் நீதி வழங்குதலை மேம்படுத்த உதவுகிறது.

இத்திட்டத்தின் கீழ் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் பகிர்ந்தளிக்கப்படும் நிதியுதவி 2015-2016-ஆம் ஆண்டு முதல் 60:40 என்கிற விகிதத்தில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

2021-2022-ஆம் ஆண்டில், மாவட்ட மற்றும் கீழமை நீதிமன்றங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான மத்திய அரசின் நிதியுதவி திட்டத்தை செயல்படுத்துவதற்காக ஒன்றிய அரசு 60 சதவிகிதம் பங்களிப்பாக ரூ.35.66 கோடியை மாநிலத்திற்கு வழங்கியது. மாநில அரசு

மொத்தம் ரூ.59.43 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு செய்தது. இதில் மாநிலத்தின் பங்கு ரூ.23.77 கோடி (40%) ஆகும்.

2022-2023-ஆம் ஆண்டில், ஒன்றிய அரசின் நிதியுதவி ரூ.133.85 கோடிக்கு (60%) இணையாக, ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டத்தின் கீழ் "நடைபெற்று வரும் திட்டங்கள்" (Ongoing Schemes) மற்றும் "புதிய திட்டங்கள்" (New Schemes) என 16 திட்டங்களை செயல்படுத்துவதற்காக மொத்தம் ரூ.223.09 கோடிக்கு இந்த அரசு நிதி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இதில் மாநில அரசின் பங்கு ரூ.89.24 கோடி (40%) ஆகும்.

2022-2023-ஆம் ஆண்டின், தமிழ்நாடு அரசால், ஒன்றிய அரசின் நிதி உதவியுடன்

செயல்படுத்தப்பட்ட மேற்கூறிய திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து “9 புதிய திட்டங்களை” துவங்குவதற்கு, 2023-2024-ஆம் ஆண்டில் அனுமதி வழங்கி விரைவாக செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**13. மின்னணு நீதிமன்றம் (e-Courts)**

2023-2024-ஆம் ஆண்டில், சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரைக் கிளை மற்றும் கீழமை நீதிமன்றங்களுக்கு, குறும்பரப்பு வலையமைப்பு (Local Area Network), அகண்டபரப்பு வலையமைப்பு (Wide Area Network) வசதி வழங்குவதற்கும், கணினி மற்றும் தகவல் தொழில்நுட்ப சாதனங்கள், மடிக்கணினி, நகலெடுப்பான் மற்றும் அச்சுப்பொறி இயந்திரம்

ஆகியவை வாங்குவதற்கும், ரூ.57,43,33,887/-க்கு அரசு நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

## 14. நீதித்துறை முத்திரைத்தாள் மின்னணுமயமாக்கல்

நீதி சார்ந்த மின்னணு முத்திரைத்தாள் முறை மூலம், நீதிமன்ற கட்டணத்தைச் செலுத்தும் முறையானது சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறையானது மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்ட முதன்மை நீதிமன்றங்கள் மற்றும் சார்பு நீதிமன்றங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

இந்த வசதியை இணையம் மூலமாகவும், அங்கீகரிக்கப்பட்ட சேகரிப்பு மையங்கள்

மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் மூலம் விண்ணப்பங்களை தாக்கல் செய்வதன் மூலமாகவும் பெறலாம்.

இ-ஸ்டாம்பிங் முறையை செயல்படுத்துவதற்காக, திருவாளர்கள் ஸ்டாக் ஹோல்டிங் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட் என்ற நிறுவனத்துடன் மாநிலத்தின் சார்பாக பதிவுத்துறைத் தலைவர் அவர்கள் ஒப்பந்தம் செய்துள்ளார்.

வழக்கு விவரத் தொகுப்பினை (CIS) பாரத ஸ்டேட் வங்கியின் மின்னணு பணப்பரிவத்தனை வாயிலுடன் இணைத்து நீதிமன்ற கட்டணங்களை மின்னணு பணப்பரிவர்த்தனை மூலமாகச் செலுத்த

வழிவகை செய்யும் நோக்குடன், சென்னை உயர்நீதிமன்றம் பாரத ஸ்டேட் வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of Understanding) செய்துள்ளது.

சென்னை உயர்நீதிமன்றம், சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை மற்றும் மாவட்ட நீதிமன்றங்கள் வாயிலாக 01.03.2024 வரை பெறப்பட்ட மின்னணு நீதிமன்ற கட்டண விவரம் பின்வருமாறு.

- சென்னை உயர்நீதிமன்றம் – ரூ.159.48 கோடி
- மதுரைக் கிளை – ரூ.36.37 கோடி
- மாவட்ட நீதித்துறை – ரூ.145.37 கோடி

## 15. தமிழ் வழியிலான சட்ட இதழ்

வழக்குரைஞர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக ‘தீர்ப்பு திரட்டு’ என்ற பெயரில்

தமிழ் வழியிலான சட்ட இதழ் ஒரு பிரதி ரூ.205/- என்ற விலையில், மாதமிருமுறை வெளியிடப்பட்டு வருகிறது. இதற்காக, 2024-2025-ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், ரூ.1,29,86,000/-ம் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**16. நீதித்துறை பயிற்சிக் கழகம்**

- தமிழ்நாடு மாநில நீதித்துறை பயிற்சிக் கழகம் சென்னையிலும், அதன் இரண்டு மண்டல மையங்கள் மதுரை மற்றும் கோயம்புத்தூரிலும் அமைந்துள்ளன.
- மாவட்ட நீதிபதிகள், முதுநிலை உரிமையியல் நீதிபதிகள், உரிமையியல் நீதிபதிகள் மற்றும் நீதித்துறை பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதும்,

புதியதாக நியமனம் செய்யப்படும் நீதிபதிகளுக்கு அறிமுகப் பயிற்சி வழங்குவதும் இப்பயிற்சி கழகத்தின் முதன்மையான நோக்கமாகும்.

- 2024-2025 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில், சம்பளம், படிகள் மற்றும் இதர செலவினங்களுக்காக ரூ.9.70 கோடிக்கு அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**17. அரசு தலைமை சொத்தாட்சியர் - பொறுப்பு சொத்தாட்சியர்**

சென்னையில் மாவட்ட நீதிபதி நிலையில், அரசு தலைமை சொத்தாட்சியர் பொறுப்பு சொத்தாட்சியர், அறக்கட்டளைகளின் சொத்துக்கள், உரிய வயதடையாதவர்களின்

சொத்துக்கள் மற்றும் காலமானவர்களின் எஸ்டேட் சொத்துக்களுக்கும் பொறுப்பு வகித்து வருகிறார். இவருக்கு உதவியாக உரிமையியல் நீதிபதி நிலையில் துணைத் தலைமை சொத்தாட்சியர் - பொறுப்பு சொத்தாட்சியர் உள்ளார்.

அரசு தலைமை சொத்தாட்சியர், அரசு உடமையாக்கப்பட்ட வங்கிகளில் வைக்கப்பட்டு உள்ள ரூ.3.65 கோடி பணமதிப்புள்ள 39 இறந்த நபர்களின் 907 நிரந்தர வைப்பு நிதித் தொகைகளையும், அறக்கட்டளை சொத்துகளையும் நிர்வகித்து வருகிறார்.

பொறுப்பு சொத்தாட்சியர் அரசு உடமையாக்கப்பட்ட வங்கிகளில் வைக்கப்பட்டு

உள்ள ரூ.78.17 கோடி பணமதிப்புள்ள 160 இறந்த நபர்களின் 4113 நிரந்தர வைப்பு நிதித் தொகைகளையும் அறக்கட்டளை சொத்துகளையும் நிர்வகித்து வருகிறார்.

அறக்கட்டளை சொத்திலிருந்து வாடகை வருமானம் மற்றும் நிரந்தர வைப்புத் தொகையிலிருந்து பெறப்படும் வட்டி வருமானம் ஆகியவை கீழ்கண்ட மக்களுக்கு உதவும் தன்மையுடைய நற்செயல்களுக்கு (Philanthropic activities) பயன்படுத்தப்படுகிறது:-

i. அறச்செயல்கள் மற்றும் பயனாளிகள் பராமரிப்பு.

ii. மாணவர் உதவித் தொகை.

iii. சொத்தாட்சியர் அலுவலக பணியாளர்களின் சம்பளம்.

iv. வருமான வரி மற்றும் இதர அவசிய செலவிற்காக அரசுக்கு செலுத்த வேண்டிய சட்டப்படியான கட்டணங்கள்.

v. சென்னை உயர்நீதிமன்ற ஆணைப்படி, பொருள் (articles), மருத்துவ உபகரணங்கள் போன்ற இனங்களுக்காக செலவிடப்படும் சிறப்பு நன்கொடை.

**18. தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதி**

தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதியிலிருந்து, மரணம் அடைந்த வழக்குரைஞர்களின் சட்டப்பூர்வ வாரிசுகள் / பரிந்துரைக்கப்பட்ட நபர்களுக்கு நிதி உதவி வழங்குவதற்காக நிறுவப்பட்டது. இது தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வழக்குரைஞர் குழுமத்தால் நிர்வகிக்கப்படுகிறது. இந்த நிதியானது தமிழ்நாடு

வழக்குரைஞர்கள் நல நிதிச் சட்டம், 1987-ன்கீழ் வரன்முறைப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதியிலிருந்து பயனாளிகளுக்கு வழங்கப்படும் நிதியுதவி ரூ.7 இலட்சத்தில் இருந்து ரூ.10 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

2022-2023-ஆம் ஆண்டில் மேற்படி நல நிதிக்கு வழங்கப்படும் ஆண்டு மானியம் ரூ.8 கோடியிலிருந்து ரூ.10 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

உயிரிழந்த வழக்குரைஞர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிதியுதவி, 2022-2023-ஆம் ஆண்டில் அதிகமாக நிலுவையில் இருந்தது. இதனை முழுமையாக வழங்க ஏதுவாக, ரூ.5,71,92,000/- நிதியினை

ஒருமுறை கூடுதல் மானியமாக தமிழ்நாடு வழக்குரைஞர் நல நிதிக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

2023-2024 மற்றும் 2024-2025-ஆம் ஆண்டுகளில், வரவு செலவு திட்டத்தின் கீழ் ஆண்டு மானியமாக ரூ.10 கோடியை அரசு வழங்கியுள்ளது.

**19. தமிழ்நாடு வழக்குரைஞர்களின் எழுத்தர்கள் நல நிதி**

தமிழ்நாடு வழக்குரைஞர்களின் எழுத்தர்கள் நல நிதி, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வழக்குரைஞர் குழுமம் மூலம் நிர்வகிக்கப்படுகிறது. இந்த நிதியானது, தமிழ்நாடு வழக்குரைஞர்கள் எழுத்தர்கள் நல நிதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள

வழக்குரைஞர்களின் எழுத்தர்களுக்கு நல நிதி வழங்குவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட தமிழ்நாடு வழக்குரைஞர்கள் எழுத்தர் நல நிதிச் சட்டம், 1999-ஆல் வரன்முறைப்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு வழக்குரைஞர்களின் எழுத்தர்கள் நல நிதித் திட்டத்தில் உறுப்பினராக சேரும்போது ரூ.500/-ம், சந்தா கட்டணமாக ரூ.5,000/ம்-செலுத்த வேண்டும். இது தவிர, தமிழ்நாடு வழக்குரைஞர்கள் எழுத்தர்கள் நல நிதித் திட்டத்தின் வருவாயை அதிகரிக்க எழுத்தர் நல வில்லை கட்டணம் ரூ.10/- வசூலிக்கப்படுகிறது.

தற்போது, தமிழ்நாடு வழக்குரைஞர்களின் எழுத்தர்கள் நல நிதியிலிருந்து ரூ.4 இலட்சம் நிதியுதவியானது, இறந்த வழக்குரைஞர்களின்

எழுத்தர்களின் வாரிசுதாரர்கள் / சார்ந்திருப்பவர்களுக்கு வழங்கப்படுகிறது.

## 20. இளம் வழக்குரைஞர் உதவித் தொகை

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வழக்குரைஞர் குழுமத்தில் புதியதாக பதிவு செய்யும் இளம் வழக்குரைஞர்களுக்கு, மாதம் தோறும் ரூ.3,000/- வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு குறிப்பிட்ட தகுதிகளின் அடிப்படையில் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டம், சட்டக் கல்வி இயக்குநர், சென்னை மூலமாக செயல்படுத்தப்படுகிறது.

இளம் வழக்குரைஞர்களுக்கு, மாதாந்திர உதவித் தொகையாக ரூ.3000/- வீதம் வழங்கப்பட்ட விவரம் பின்வருமாறு:-

| வருடம் | அரசால் செலவிடப்பட்ட தொகை |
|---|---|
| 2021-2022 | ரூ.4,76,40,000/- |
| 2022-2023 | ரூ.5,72,58,000/- |
| 2023-2024 | ரூ.4,24,74,000/- |

இளம் வழக்குரைஞர்களுக்கு உதவித் தொகை வழங்குவது தொடர்பான விண்ணப்பதாரரின் தகுதி மற்றும் தகுதியின்மை, விண்ணப்பிக்கும் முறை மற்றும் விண்ணப்பம் சரிபார்ப்பு முறை ஆகியவற்றிற்காக அரசு பின்வரும் வழிகாட்டுதல்களை வகுத்துள்ளது:-

**தகுதிகள்:-**

i) விண்ணப்பதாரர் சட்டப் படிப்பில் இளங்கலை பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

ii) விண்ணப்பதாரர் மேற்படி பட்டப்படிப்பை அரசு சட்டக் கல்லூரியில் படித்திருக்க வேண்டும்.

iii) விண்ணப்பதாரர் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வழக்குரைஞர் குழுமத்தில் பதிவு செய்திருக்க வேண்டும்.

iv) விண்ணப்பதாரர் ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கும் தனது மூத்த வழக்குரைஞரால், விண்ணப்பதாரர் இன்னும் வழக்குரைஞர் பணியில் நடைமுறையில் இருப்பதாக சான்றளிக்கப்பட்ட உறுதி பத்திரத்தை பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

iv) விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் தேதியில், விண்ணப்பதாரர் 30 வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

vi) விண்ணப்பதாரர் 2 ஆண்டுகளுக்கு மட்டும் மாதம் ரூ.3,000/- உதவித் தொகை பெறத் தகுதியுடையவர்.

vii) விண்ணப்பதாரரிடம் ஆதார் அட்டை / அடையாளச் சான்று இருக்க வேண்டும்.

viii) விண்ணப்பதாரர் தமிழ்நாட்டில் வசிப்பவராக இருக்க வேண்டும்.

ix) விண்ணப்பதாரரின் குடும்ப வருமானம், ஆண்டுக்கு 2.5 இலட்சத்துக்கு குறைவாக இருக்க வேண்டும்.

x) ஒரு குடும்பத்தில் ஒருவர் மட்டுமே இந்த உதவித் தொகையை பெற முடியும் ("குடும்பம்" என்றால் கணவன், மனைவி மற்றும் அவர்களது குழந்தைகள்).

**தகுதியின்மை:-**

i) மூன்று வருட பயிற்சி முடித்த விண்ணப்பதாரர் தகுதியற்றவர்.

ii) தனது பெயரில் நான்கு சக்கர வாகனம் வைத்திருக்கும் விண்ணப்பதாரர் தகுதியற்றவர்.

iii) பயிற்சி பெறாத வழக்குரைஞர்கள் தகுதியற்றவர்கள் (பயிற்சி பெறாத வழக்குரைஞர்கள் என்பது, தமிழ்நாடு

வழக்குரைஞர் குழுமத்தில் பதிவு செய்து வழக்குரைஞர் பயிற்சியில் அல்லாமல் வேறு சில பொது அல்லது தனியார் வேலை, வணிக ஒப்பந்தம் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளோர்.)

iv) பயிற்சி வழக்குரைஞர், வேறு தொழிலில் ஈடுபட்டிருந்தால் தகுதியுடையவர் அல்ல.

## 21. தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு

இம்மாநிலத்தில் தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழுவினையும், மாவட்டந்தோறும் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழுவினையும் அரசு ஏற்படுத்தியுள்ளது. மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு, ஒவ்வொரு பகுதியிலும், வட்ட

சட்டப்பணிகள் குழுக்களை மாநிலம் முழுவதும் அமைத்துள்ளது.

தற்போது, மாநிலத்தில் 32 மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுக்கள், 178 வட்ட சட்டப்பணிகள் குழுக்கள் மற்றும் 2 உயர்நீதிமன்ற சட்டப்பணிகள் குழுக்கள் இயங்கி வருகின்றன.

சமுதாயத்தில் மிகவும் நலிவடைந்த பிரிவினருக்கு இலவசமாக சட்டம் சார்ந்த சேவைப் பணிகளை வழங்கவும், பொருளாதார அல்லது ஏனைய இயலாமைகள் காரணமாக எந்த ஒரு குடிமகனுக்கும் நீதி கிடைப்பதற்கான வாய்ப்புகள் மறுக்கப்படக் கூடாது என்பதை உறுதி செய்வதற்கும், மக்கள் நீதிமன்றங்களை

மாற்று தீர்வு காணும் ஒரு மாற்று அமைப்பாக சட்டப்பூர்வமாக ஏற்படுத்துவதற்கும், சமுதாயத்தில் ஏழை எளிய மக்களுக்கு அவர்களுடைய உரிமைகள் குறித்து பயிற்றுவிக்கவும், சமூக நலன் குறித்த பல்வேறு சட்டங்கள் மற்றும் நிருவாக ஆணைகளின்படி அவர்களுக்குரிய பயன்கள் மற்றும் சலுகைகளைப் பெற வழிவகை செய்யவும், 1987-ஆம் ஆண்டைய சட்டப்பணிகள் ஆணைக்குழு சட்டம் (1994-ஆம் ஆண்டின் 59-வது சட்டப்படி திருத்தியமைக்கப்பட்டது) இயற்றப்பட்டது.

2023-2024-ஆம் ஆண்டில், தமிழ்நாடு சட்டப் பணிகள் ஆணையத்திற்கு, மானியம், சம்பளம் மற்றும் படிகள், பாலியல் வன்கொடுமை மற்றும்

பிற குற்றங்களில் பாதிக்கப்பட்ட / தப்பிய பெண்களுக்கென, தமிழ்நாடு இழப்பீட்டுத் திட்டம், 2018-ன் கீழ் உதவித் தொகை ஆகியவற்றை வழங்குவதற்காக மொத்தம் ரூ.40.26 கோடியை அரசு வழங்கியுள்ளது.

## 21.1. சட்ட உதவி பெறத் தகுதியுடையோர்

சட்டப்பணிகள் ஆணைக்குழு சட்டம், 1987-ன், பிரிவு 12-ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் அளவுகோல்களில் ஏதாவது ஒன்றையோ அல்லது அனைத்தையும் நிறைவு செய்யும் நபர்கள் சட்டப்பணிகள் ஆணைக்குழுவினால் முகாந்திரம் உள்ள வழக்குகள் எனக் கருதப்படும் வழக்குகளை தொடுக்கவும், எதிர்த்து வழக்காடவும் சட்ட உதவி பெற தகுதியுடையவர்களாவர்:-

(i) ஆதிதிராவிடர் (அல்லது) பழங்குடியினர்

(ii) அரசியலமைப்பு சட்டப் பிரிவு 23-ல் குறிப்பிடப்பட்டு உள்ளவாறு மனிதர்களை விற்பது, வாங்குவது, கடத்துவது (அல்லது) வற்புறுத்தி வேலை வாங்குவது ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட நபர்

(iii) பெண் (அல்லது) குழந்தை

(iv) மாற்றுத் திறனாளிகள்

(v) பேரிடர்கள், இன வன்முறை, சாதிய வன்கொடுமை, வெள்ளம், பஞ்சம், நில நடுக்கம் அல்லது தொழிற்சாலை பேரிடர் ஆகியவற்றால் பாதிப்பிற்கு உள்ளானவர்கள்; அல்லது

(vi) தொழிற்சாலை தொழிலாளர்கள் அல்லது

(vii) பாதுகாப்பு இல்லம், இளம் குற்றவாளிகள் இல்லம், மன நல மருத்துவமனை அல்லது மனநலக் காப்பகம் ஆகியவற்றில் காவலில் உள்ளவர்கள் உள்ளிட்ட சிறைக் காவலில் இருப்போர்; அல்லது

(viii) சட்டப்பணிகள் ஆணைக்குழு சட்டம், 1987-ன், பிரிவு 12(எச்)-ல் குறிப்பிட்டுள்ள ஆண்டு வருமானத்திற்கு குறைவாக ஆண்டு வருமானம் பெறுபவர்கள். இலவச சட்ட உதவி பெறுவோருக்கான ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.3,00,000/-ஆகும்.

### 21.2. சட்ட உதவி வழக்குரைஞர் திட்டம்

காவலில் உள்ளவர்கள் பிணையில் வெளிவருவதற்கும், மீண்டும் காவலில் வைப்பதற்கான ஆணையை எதிர்ப்பதற்கும், காவலில் உள்ளவர்கள் வழக்கை எதிர்கொள்வதற்கும், பாதகமான உத்தரவுகளை எதிர்த்து மேல் முறையீடு மற்றும் மறு ஆய்வு செய்வதற்கும், தேவையான சட்ட உதவிகளை அளிப்பதற்கும் இத்திட்டம் உதவுகிறது.

குற்றவியல் நீதித்துறை நடுவரின் முன்பாக காவலில் வைப்பதற்காக அழைத்து வரப்படும் நபர்கள் வழக்குரைஞர்கள் வைத்துக் கொள்ள வசதியற்றவர்களாக இருப்பின், அவர்களுக்கு சட்ட உதவி அளிப்பதற்கு, சட்ட உதவி வழக்குரைஞர்கள் உதவிபுரிகின்றனர்.

சட்ட உதவிகள் வழக்குரைஞர் திட்டத்தின் செயல்திறன் (Performance) கீழே விவரிக்கப்பட்டுள்ளது:-

| வருடம் | சட்ட உதவிகள் வழங்கப்பட்ட நீதிமன்ற காவலில் இருந்த சிறை கைதிகளின் எண்ணிக்கை | நீதிமன்ற காவலில் இருந்த சிறை கைதிகளிடமிருந்து பெறப்பட்ட பிணை விண்ணப்பங்களின் எண்ணிக்கை | பிணை வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2021 | 5,120 | 2,607 | 1,866 |
| 2022 | 3,551 | 2,511 | 1,640 |
| 2023 | 4,092 | 1,780 | 1,549 |
| 2024 (மார்ச் 2024 வரை) | 984 | 383 | 274 |

## 21.3. சட்டம் சார்ந்த உதவிகள்

சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள ஏழை எளிய மக்கள், அரசு வழங்கும் நலத்திட்ட

உதவிகளை பெறுவதற்கு, சட்டப்பணிகள் ஆணைக் குழுக்கள் / சட்டப்பணிகள் குழுக்கள் இலவசமாக சட்ட உதவிகள் அளித்து வருகின்றன. மேலும், குற்ற வழக்கில் பாதிக்கப்பட்டவர்கள் சட்ட உதவிகள் பெறுவதற்கும், மோட்டார் வாகன விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்கள் உரிய இழப்பீடு பெறுவதற்கும் உதவுகின்றன.

### 21.4. மக்கள் நீதிமன்றம் (Lok Adalat)

நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்குகளில் அல்லது நீதிமன்ற அதிகார வரம்பிற்குள் வருகின்ற பொருண்மைகளில் சம்மந்தப்பட்ட தரப்பினர்களுக்கிடையே ஒரு தீர்வு எட்டுவதற்கு மக்கள் நீதிமன்றங்கள்

நடத்தப்பட்டு வருகின்றன. நிரந்தர மக்கள் நீதிமன்றங்கள், சட்டப்பணி ஆணைக்குழு சட்டம், 1987-ன், பிரிவு 22பி-ன்படி, 32 மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உச்சநீதிமன்றம் முதல் வட்ட அளவிலான நீதிமன்றம் வரை அனைத்து நீதிமன்றங்களிலும் தேசிய மக்கள் நீதிமன்றங்கள் நடைபெற்று வருகின்றன. மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு, வழக்கமாக நடத்தப்படும் மக்கள் நீதிமன்றத்துடன் தேசிய மக்கள் நீதிமன்றத்தையும் நடத்தி வருகிறது.

2021-2022, 2022-2023 மற்றும் 2023-2024-ஆம் நிதியாண்டுகளுக்கான தீர்வுத் தொகை மற்றும் வழக்குகளின் எண்ணிக்கை பின்வருமாறு:-

| நிதியாண்டு | தீர்க்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | தீர்வுத் தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 2021-2022 | 3,25,445 | 2676,57,23,025 |
| 2022-2023 | 4,45,397 | 3420,95,64,005 |
| 2023-2024 | 3,68,256 | 3191,46,23,092 |
| மொத்தம் | 11,39,098 | 9288,99,10,122 |

### 21.5. சிறைத்துறையில் மக்கள் நீதிமன்றம்

சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், கடலூர், சேலம், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலைகளிலும் மற்றும் வேலூரில் உள்ள பெண்கள் தனிச்சிறைச்சாலையிலும் சட்ட உதவி மையம் மற்றும் மக்கள் சிறைச்சாலை நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

சென்னை புழலிலுள்ள மத்தியச் சிறைச்சாலையில் ஒரு சட்ட உதவி மையம் இயங்கி வருகிறது. சிறைச்சாலை நீதிமன்றம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடைபெறுகிறது.

சிறைவாசிகளிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு அவை சட்ட உதவி மையங்களில் உள்ள உரிய பதிவேடுகளில் பதியப்பட்டு, அவற்றின்மீது மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

சிறைத்துறையில் இயங்கும் மக்கள் நீதிமன்றத்தின் செயல்திறன் பின்வருமாறு:-

| வருடம்/ காலம் | அமைக்கப்பட்ட அமர்வுகளின் எண்ணிக்கை | பரிந்துரைக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2021 | 10 | 35 | 35 |
| 2022 (19.10.2022 உட்பட) | 96 | 828 | 405 |
| 2023 (26.08.2023 உட்பட) | 92 | 803 | 476 |
| 2024 (27.03.2024 உட்பட) | 93 | 654 | 304 |

தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் ஆணைப்படி, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவும், வட்ட சட்டப் பணிகள் குழுவும் தங்களுடைய சேவைகளை விசாரணைக் கைதிகளுக்கும் விரிவுபடுத்தியுள்ளன. 19.10.2022 அன்று மாநிலம் முழுவதும் நடைபெற்ற சிறைத்துறை மக்கள்

நீதிமன்றங்கள் மூலம் பல சிறு குற்ற வழக்குகள் முடித்து வைக்கப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:-

| வருடம் | அமைக்கப்-பட்ட அமர்வுகளின் எண்ணிக்கை | பரிந்துரைக்கப்-பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | முடித்து வைக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | விசாரணை நாள் அன்றே விடுவிக்கப்-பட்டவர்கள் | |
|---|---|---|---|---|---|
| | | | | ஆண் | பெண் |
| 2022 (19.10.22) | 87 | 727 | 353 | 232 | 8 |
| 2023 (26.08.23) | 81 | 742 | 451 | 283 | 1 |
| 2024 (27.03.24) | 92 | 651 | 301 | 220 | 4 |

## 21.6. நடமாடும் ஊர்தி

சட்டப்பணிகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்ட சட்ட உதவித் திட்டங்கள் மற்றும் செயல்முறைத் திட்டங்களை விளம்பரப்படுத்துவதில் மாநிலத்தின் பிரச்சார இயக்கத்தின் ஒரு பகுதியாக, நடமாடும்

நீதிமன்றங்கள் நடத்திடவும், சட்ட விழிப்புணர்வு முகாம்கள் நடத்திடவும் எல்.சி.டி திரைப்படக்கருவி மூலம் விளம்பரப் படங்களைத் திரையிடவும் "நடமாடும் ஊர்தி" பயன்படுத்தப்படுகிறது,

### 21.7. கிராம சட்ட விழிப்பு மற்றும் ஆதரவு மையங்கள்

தேசிய சட்டப்பணிகள் ஆணைக் குழுவின் வழிகாட்டுதலின்படி, சட்டப்பணிகள் நிறுவனங்களை அணுகுவதில் இருப்பிடம் மற்றும் சமூகம் சார்ந்த தடைகளை எதிர்கொள்ளும் மக்களுக்கு உதவுவதற்காக, அனைத்து கிராமங்களிலும் அல்லது பல கிராமங்கள் அடங்கிய தொகுப்பிலும் 555 "கிராம சட்ட விழிப்பு மற்றும் ஆதரவு மையங்கள்"

மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக் குழுவின் உதவியுடன் நிறுவப்பட்டுள்ளன.

இவை தெரிவு செய்யப்பட்ட வழக்குரைஞர் அல்லது தன்னார்வ சட்டத் தொண்டர்களைக் கொண்டு இயங்கிவருகிறது. இவர்கள், ஆதரவு மையங்களை நாடும் மக்களுக்கு, ஆலோசனையும், சட்ட உதவி தேவைப்படின் அருகிலுள்ள சட்ட உதவி மையங்களை அணுகுமாறும் அறிவுரை வழங்குகின்றனர்.

### 21.8. தொலைபேசி வழி சட்ட உதவி

சென்னையிலுள்ள தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக் குழுவின் சட்ட உதவி மையக் கட்டடத்தில், சட்ட உதவி தொலைபேசி எண்கள் செயல்பட்டு வருகின்றன.

இம்மையத்திற்கு அனைத்து வேலை நாட்களிலும் காலை மற்றும் மாலை இருவேளையும், பொதுமக்களின் சட்டம் சார்ந்த பிரச்சனைகளுக்கு தொலைபேசி வாயிலாக தக்க ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் வழங்குவதற்கு சுழற்சி முறையில் வழக்குரைஞர்கள் நியமிக்கப்படுகின்றனர். சட்ட உதவி கோரும் பொதுமக்கள் 044-25342441, 9445033363 மற்றும் கட்டணமில்லா உதவி தொலைபேசி எண்கள்.1800-4252-441-லும் 1800-4215-100-லும் தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி வழி சட்ட உதவி மையத்தில் பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட அழைப்பு குறித்த விவரங்கள் பின்வருமாறு:-

| வருடம் | பெறப்பட்ட அழைப்பில் வழங்கப்பட்ட சட்ட ஆலோனையின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | 044-25342441 | 9445033363 | 1800-4252-441 மற்றும் 15100 |
| 2021 | 940 | 1,447 | 570 |
| 2022 | 938 | 1,692 | 70 |
| 2023 | 984 | 880 | 286 |
| 2024 | 158 | 737 | 454 |

21.9. **மாற்றுத் தீர்வு மையங்கள்**

மாநிலத்தில் 31 மாற்றுத் தீர்வு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இது உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் 89வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, மக்கள் நீதிமன்றங்கள் மற்றும் பிற மாற்று தீர்வு முறைகள் போன்ற அனைத்து சமரச முறைகளுக்கும் இணைப்பு பாலமாக செயல்படுகின்றன.

## 21.10. **ஆலோசனை மற்றும் சமரச மையம்**

மாநிலத்தில் 185 சமரச மையங்கள் வழக்குக்கு முந்தைய தீர்வுகளுக்கான கருவியாக செயல்பட்டு வருகின்றன. அவை அடிமட்ட நிலையில் சர்ச்சைத் தீர்வுக்கான மாற்று அமைப்பை வழங்குகின்றன.

| வருடம் | பரிந்துரைக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | தீர்க்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2021 | 13,592 | 1,808 |
| 2022 | 16,314 | 2,440 |
| 2023 | 22,724 | 2,711 |
| 2024 (மார்ச் 2024 வரை) | 6,595 | 872 |

மாநிலத்தில், 212 ஆலோசனை மையங்கள் செயல்பட்டு வருகின்றன, அவற்றின் மூலம்

தீர்க்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வருடம் | முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| 2021 | 562 |
| 2022 | 938 |
| 2023 | 811 |
| 2024 (மார்ச் 2024 வரை) | 188 |

2024-2025-ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில்,, மாற்றுத் தீர்வு மையங்களின் கீழ் ஆலோசனை மற்றும் சமரச மையங்களை நடத்துவதற்கு உதவித் தொகையாக ரூ.4.70 கோடி அரசால் வழங்கப்பட்டுள்ளது.

## 22. குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம்

குற்றவியல் நீதி அமைப்பின் நிர்வாகத்தில், குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம் இன்றியமையாத பங்கினை வகிக்கிறது. இத்துறையின் முதன்மை நோக்கம் குற்ற வழக்குகளை நடத்துவது மட்டுமன்றி, குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத்தருவது மற்றும் நீதிமன்றங்களில் குற்ற வழக்குகளை குறைப்பதுவும் ஆகும். இவ்வியக்ககமானது மாநிலத்தில் உள்ள தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள், தலைமைப் பெருநகரக் குற்றவியல் நீதிமன்றங்கள், நாடாளுமன்ற/ சட்டமன்ற உறுப்பினர்களின் மீதான வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள், போக்சோ வழக்குகளுக்கான சிறப்பு

நீதிமன்றங்கள், மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்கள் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்களில் குற்ற வழக்குகள் முறையாக நடத்தப்படுவதை உறுதி செய்கிறது.

குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம் உள்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. இவ்வியக்ககத்திற்கு ஒரு முதுநிலை குற்ற வழக்குத் தொடர்வு அலுவலர், குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநராக தலைமை வகிக்கிறார். இணை இயக்குநர் (நிர்வாகம்) மற்றும் இதழ் ஆசிரியர் (வெளியீடுகள்) ஆகியோர் தலைமையகத்தில் நிர்வாகப் பணிகளில் குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் அவர்களுக்கு உறுதுணையாகப் பணிபுரிந்து வருகின்றனர்.

மண்டல அளவில் சென்னை, கோயம்புத்தூர், கடலூர், காஞ்சிபுரம், மதுரை, சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர் ஆகிய 11 இடங்களில் குற்ற வழக்குத் தொடர்வு துணை இயக்குநர்களும், மாவட்ட அளவில் ஆலந்தூர், தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, நாகப்பட்டினம், நாகர்கோயில், நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், நீலகிரி, திருவள்ளூர், திருவண்ணாமலை, தூத்துக்குடி, விழுப்புரம், விருதுநகர், கிருஷ்ணகிரி மற்றும் திருப்பூர் ஆகிய 18 இடங்களில் குற்ற வழக்குத் தொடர்வு உதவி இயக்குநர்களும் நிர்வாக பொறுப்பு வகித்து வருகின்றனர். இவ்விவரம் பிற்சேர்க்கை-V-ல் இணைக்கப்பட்டு உள்ளது.

குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர், குற்ற வழக்குத் தொடர்வுத்துறையின் ஒட்டுமொத்த நிர்வாகத் தலைவர் ஆவார். இயக்குநரின் பணியானது குற்ற வழக்கு நடத்துநர்களுக்கும் புலனாய்வு அலுவலர்களுக்கும் (investigating police officers) இடையே திறம்பட்ட ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதும், குற்ற வழக்குத் தொடர்வு துணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர்களால் வழங்கப்படும் சட்ட கருத்துரைகள் மற்றும் சட்ட அலுவலர்களின் பணிகள் குறித்த புள்ளி விவரங்களைக் கண்காணிப்பதும், அது தொடர்பான ஆய்வுக்கூட்டங்களை நடத்துவதும், கூடுதல் அரசு வழக்கு நடத்துநர், சிறப்பு வழக்கு நடத்துநர்களின் நீதிமன்றப் பணிகள்

குறித்து ஆய்வுக்கூட்டங்களை நடத்தி அதன் விவரங்களை அரசுக்குத் தெரியப்படுத்துதலும் ஆகும்.

இணை இயக்குநர் (நிர்வாகம்) அவர்கள், குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் அவர்களின் நிர்வாகத்தின் கீழ் பணியாற்றுபவராகவும், இயக்குநரின் அறிவுரைகளை சார்நிலை அலுவலர்கள் முறையாக பின்பற்றுகிறார்களா என்பதை உறுதி செய்பவராகவும், குற்ற வழக்கு நடத்துநர்களின் நீதிமன்ற பணிகளை திடீர் ஆய்வு செய்து, அவர்தம் பணிகளை கண்காணிப்பவராகவும், இயக்குநரால் அறிவுறுத்தப்படும் பொருள் தொடர்பாக ரகசிய விசாரணைகள் மேற்கொள்பவராகவும் செயல்பட்டு வருகிறார். மேலும் இவர் கண்காணிப்புக்குழு (Vigilance Committee),

தள்ளுபடி செய்த வழக்குகள் குறித்து ஆய்வு செய்யும் குழு (Contents Committee), விசாகா குழு ஆகிய குழுக்களுக்கு தலைவராக இருந்து வருகிறார்.

இதழ் ஆசிரியர் (வெளியீடுகள்) அவர்களின் பணியானது, குற்ற வழக்கு நடத்துநர்கள், சட்ட அறிவினை மேம்படுத்தி பயனடையும் வகையில், முக்கிய தீர்ப்புகள் மற்றும் சிறப்பு சட்டப் பிரிவுகளை உள்ளடக்கிய 'தமிழ்நாடு குற்ற வழக்கு நடத்துநர்களுக்கான இதழினை' ஒவ்வொரு மாதமும் வெளியிடுவது தொடர்பான பணிகளை மேற்கொள்வதாகும்.

குற்ற வழக்குத் தொடர்வு துணை இயக்குநர், மண்டல அளவிலான நிர்வாகத் தலைவராகவும், அவர்களின் நிர்வாக

கட்டுப்பாட்டிற்குள் பணியாற்றி வரும் குற்ற வழக்குத் தொடர்வு உதவி இயக்குநர் அலுவலகங்கள், கூடுதல் அரசு வழக்கு நடத்துநர், அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 மற்றும் நிலை-2 ஆகியோர் தம் பணிகளை திடீர் ஆய்வு மேற்கொள்பவராகவும், மாதிரி குற்றப் பத்திரிக்கைகள் மற்றும் சட்டக்கருத்துரைகள் வழங்குபவராகவும், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரின் வேண்டுதலின்பேரில் முக்கிய குற்ற வழக்குகளுக்கு சட்டக்கருத்துரு வழங்குபவராகவும் நீதிமன்ற மற்றும் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளருக்கு ஒருங்கிணைப்பாளராகவும் செயல்பட்டு வருகிறார்.

குற்ற வழக்குத் தொடர்வு உதவி இயக்குநர் மாவட்ட அளவிலான நிர்வாக தலைவராகவும், அவர்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குள் பணியாற்றி வரும் அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 மற்றும் நிலை-2 ஆகியோரின் பணிகளை திடீர் ஆய்வு மேற்கொள்பவராகவும், மாதிரி குற்றப்பத்திரிக்கைகள் மற்றும் சட்டக் கருத்துரைகள் வழங்குபவராகவும், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரின் வேண்டுதலின் பேரில் முக்கிய குற்ற வழக்குகளுக்கு சட்டக் கருத்துரு வழங்குபவராகவும், நீதிமன்ற மற்றும் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளருக்கு ஒருங்கிணைப்பாளராகவும் செயல்பட்டு வருகிறார்.

மேலும், மாநிலம் முழுவதும் உள்ள 39 முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்களில் 39 கூடுதல் குற்றவியல் வழக்குரைஞர்கள் குற்றவியல் வழக்குகளை நடத்துகின்றனர்.

கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் நிலையில் 3 சிறப்பு வழக்கு நடத்துநர்கள் சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்களின் மீதான வழக்குகளை நடத்தும் 3 சிறப்பு நீதிமன்றங்களில் குற்ற வழக்குகளை நடத்தி வருகின்றனர்.

கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் நிலையில் 19 சிறப்பு வழக்கு நடத்துநர்கள் 19 போக்சோ சிறப்பு நீதிமன்றங்களில் குற்ற வழக்குகளை நடத்தி வருகின்றனர்.

97 “நிலை 1 அரசு குற்றவியல் உதவி வழக்கு நடத்துநர்கள்” மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்களிலும், வணிகக் குற்றப் புலனாய்வு பிரிவு மற்றும்பொருளாதார குற்றப் பிரிவுக்கான சிறப்பு நீதிமன்றங்களிலும் குற்ற வழக்குகளை நடத்தி வருகின்றனர்.

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்கள் மற்றும் பெருநகரங்களில் பெருநகர குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்களில் “அரசு உதவி குற்றவியல் வழக்கு நடத்துநர் நிலை 2” தரத்தில் 203 சட்ட அலுவலர்கள் வழக்குகளை நடத்தி வருகின்றனர்.

இது தவிர, குற்ற வழக்குத் தொடர்வுத்துறையைச் சேர்ந்த அரசு வழக்கு நடத்துநர்கள் மாற்றுப் பணியில் பல்வேறு துறைகளில் சட்ட ஆலோசர்களாக பணிபுரிந்து வருகின்றனர். துணை இயக்குநர் நிலையிலான 4 கூடுதல் சட்ட ஆலோசகர்கள் சட்டப் பிரச்சனைகளை தீர்ப்பதற்காக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையின் இயக்குநரகத்திலும், சென்னையின் தெற்கு, கிழக்கு மற்றும் வடக்கு மண்டலங்களிலும் பணிபுரிந்து வருகின்றனர். துணை இயக்குநர் நிலையிலான ஒரு மூத்த சட்ட ஆலோசகர், சட்ட சிக்கல்களில் உதவி புரிய சென்னையில் உள்ள குற்றப்பிரிவு, குற்றப்புலனாய்வுத் துறையில் பணிபுரிந்து வருகின்றார். கூடுதல் அரசு வழக்கு

நடத்துநர் நிலையிலான 34 துணை சட்ட ஆலோசகர்கள் ஊழல் தடுப்பு வழக்குகளை ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்றங்களில் நடத்தி வருகின்றனர். கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் நிலையிலான சட்ட ஆலோசகர் ஒருவர் சென்னையில் உள்ள தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையத்திலும், மேலும் ஒரு சட்ட ஆலோசகர் சென்னையில் உள்ள வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மையின்ஆணையரகத்திலும் பணிபுரிந்து வருகின்றனர்.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, காவல் துறை, சிறைத்துறை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை, உணவுப் பாதுகாப்பு மேல் முறையீட்டுத் தீர்ப்பாயம்,

விதைச்சான்று ஆணையரகம் ஆகியவற்றில் நிலை 1 தரத்தில் 25 அரசு உதவி வழக்கு நடத்துநர்கள் சட்ட ஆலோசகர்களாக மாற்றுப் பணியில் பணிபுரிந்து வருகின்றனர்.

காவல் துறை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம், உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகம், உணவுப் பகுப்பாய்வுக் கூடங்கள், தமிழ்நாடு காவல் கூடம் ஆகியவற்றில் நிலை 2 தரத்தில் 13 அரசு உதவி வழக்கு நடத்துநர்கள் சட்ட ஆலோசகர்களாக மாற்றுப்பணியில் பணிபுரிந்து வருகின்றனர்.

மேலும், இயக்குநரின் நேர்முக உதவியாளர் ஒருவரும், இரண்டு கண்காணிப்பாளர்களும், ஒரு சுருக்கெழுத்து தட்டச்சர் (நிலை-1)-ம்,

ஒரு சுருக்கெழுத்து தட்டச்சர் (நிலை-2)-ம், ஐந்து உதவியாளர்களும், ஒரு சுருக்கெழுத்து தட்டச்சர் (நிலை-3)-ம், மூன்று இளநிலை உதவியாளர்களும், இரண்டு தட்டச்சர்களும், ஒரு பதிவுரு எழுத்தரும், ஒரு ஓட்டுநரும் இவ்வியக்ககத்தில் பணிபுரிந்து வருகின்றனர்.

2021 மற்றும் 2024-க்கு இடைப்பட்ட காலத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 50 அரசு உதவி வழக்கு நடத்துநர்கள் நிலை-II தேர்வு செய்யப்பட்டு, குற்ற வழக்குத் தொடர்வுத் துறையில் நியமிக்கப்பட்டு, பணியாற்றி வருகின்றனர்.

31.03.2024 அன்று வழக்காடு துறையின் மொத்த பணியிடங்களின் (குற்ற வழக்குத் தொடர்வுத் துறை இயக்குநர் முதல் அரசு உதவி

வழக்கு நடத்துநர் நிலை-II மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் வரை) எண்ணிக்கை 812 ஆகும்.

## 23. அரசு வழக்காடல் துறை, உயர்நீதிமன்றம், சென்னை

அரசு வழக்காடல் துறை, அரசு தலைமை வழக்குரைஞர், அரசு உரிமையியல் வழக்குரைஞர் மற்றும் அரசு குற்றவியல் வழக்கு நடத்துநர் ஆகியோரின் அலுவலகங்களை ஒருங்கிணைத்து அரசு தலைமை வழக்குரைஞரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. 14 அலுவலகங்கள் அவரது கட்டுப்பாட்டில் உள்ளன. சென்னை உயர்நீதிமன்றத்தில் அரசு சார்பாக வாதிடுவதற்காக, கூடுதல் தலைமை அரசு வழக்குரைஞர் அலுவலகங்கள் I, II, IV, V, VII, VIII & IX, மாநில குற்றவியல் வழக்குரைஞர்

அலுவலகம் மற்றும் மாநில உரிமையியல் வழக்குரைஞர் அலுவலகம் ஆகியவை செயல்படுகின்றன. சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில், அரசு சார்பாக வாதிடுவதற்காக, கூடுதல் தலைமை அரசு வழக்குரைஞர் அலுவலகங்கள் III, VI, உரிமையியல் வழக்குரைஞர் அலுவலகம் மற்றும் கூடுதல் குற்றவியல் வழக்குரைஞர் அலுவலகம் ஆகியவை செயல்படுகின்றன.

அரசு வழக்காடும் துறையானது, சென்னை உயர்நீதிமன்றத்தின் முதன்மை ஆயத்திலும், அதன் மதுரைக் கிளையிலும், 234 சட்ட அலுவலர்கள் மற்றும் 375 பணியாளர்கள் ஒப்பளிக்கப்பட்டு உரிமையியல் மற்றும் குற்றவியல் பிரிவுகளில் செயல்பட்டு வருகிறது.

## 24. புது தில்லி, தமிழ்நாடு இல்லத்தில் இயங்கிவரும் சட்டப்பிரிவு

புது தில்லி, தமிழ்நாடு இல்லத்தில் இயங்கிவரும் சட்டப்பிரிவானது முதன்மை குடியுரிமை ஆணையரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது.

இச்சட்டப்பிரிவு, தமிழ்நாடு அரசு தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் பதியப்படும் வழக்குகளை திறம்பட கையாளும் பணியினை தேவையான பணியாளர்களுடன் செய்து வருகிறது.

உச்ச நீதிமன்றத்தில், மாநில அரசு சார்பில் வாதாட 5 பதிவுரு வழக்குரைஞர்கள் (Advocate-on-Record) மற்றும் 2 கூடுதல் தலைமை வழக்குரைஞர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## 25. மாவட்ட நீதிமன்றங்களில் சட்ட அலுவலர்கள்

அரசு சார்பாக உரிமையியல் வழக்குகளில் வாதாடுவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாவட்ட அமர்வு நீதிமன்றம், கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சார்பு நீதிமன்றம், மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஆகிய நீதிமன்றங்களில் காலமுறை அடிப்படையில் (மூன்று ஆண்டுகளுக்கு), மாவட்ட ஆட்சியர், மாவட்ட தலைமை நீதிபதி, மாநகர காவல் ஆணையர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோரது பரிந்துரையின் அடிப்படையில் அரசு உரிமையியல் வழக்குரைஞர்கள், கூடுதல் அரசு உரிமையியல் வழக்குரைஞர்களை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அரசு நியமனம் செய்கிறது.

இதேபோல், குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973, பிரிவு 24 (3) ன் கீழ், மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் மற்றும் அரசு கூடுதல் மாவட்ட நீதிமன்றங்களில் அரசு சார்பாக வாதாடுவதற்கு அரசு குற்றவியல் வழக்கு நடத்துநர்கள் மற்றும் அரசு கூடுதல் குற்றவியல் வழக்கு நடத்துநர்களை, கால முறை அடிப்படையில் (மூன்று ஆண்டுகளுக்கு), ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அரசு நியமனம் செய்கிறது.

1973-ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 24(8)-ன் கீழ், ஒரு குறிப்பிட்ட வழக்கிலோ அல்லது வழக்குகளிலோ அரசு சார்பாக வாதாடுவதற்கு சிறப்புக் குற்றவியல் வழக்குரைஞர்களை அரசு நியமனம் செய்கிறது.

## 26. சிறப்பு குற்றவியல் வழக்கு நடத்துநர்கள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சட்டம், 1989, முதலீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாத்தல் (நிதி நிறுவனங்களில்) சட்டம், 1997, அத்தியாவசிய பொருட்கள் சட்டம், 1955, மருந்துகள் மற்றும் மன மயக்கம் சார்ந்த பொருட்கள் சட்டம், 1985, மனித உரிமைகள் சட்டம், 1993, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1957, வெடிகுண்டு வெடிப்பு வழக்குகள், பயங்கரவாத மற்றும் சீர்குலைக்கும் நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம், 1987 மற்றும் பொடா சட்டம், 2022 ஆகிய சட்டப்பிரிவுகளின் கீழ் பதியப்படும் வழக்குகளில் அரசு சார்பாக வாதாடுவதற்கு மாவட்ட கீழமை நீதிமன்றங்களில் காலமுறை அடிப்படையில்,

சிறப்பு குற்றவியல் வழக்குரைஞர்கள்/சிறப்பு வழக்கு நடத்துநர்கள் தமிழக அரசால் நியமிக்கப்படுகின்றனர்.

மேலும், மகிளா நீதிமன்ற வழக்குகள், வனக் குற்ற வழக்குகள், நில அபகரிப்பு வழக்குகள் மற்றும் நில எடுப்பு வழக்குகள் உள்ளிட்ட வழக்குகளை விசாரிப்பதற்கென மாவட்டங்களில் அமைக்கப்பட்டு உள்ள நீதிமன்றங்களில் பதிவு செய்யப்படும் வழக்குகளில் அரசு சார்பாக வாதாடுவதற்கு அரசு சிறப்புக் குற்றவியல் வழக்குரைஞர்கள் காலமுறை அடிப்படையில் (Tenure Basis) நியமனம் செய்யப்படுகிறார்கள்.

## 27. உயர்நீதிமன்ற நடவடிக்கைகளில் தமிழ்மொழியை பயன்படுத்துதல்

சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ் மொழியை அலுவல் மொழியாக பயன்படுத்த அனுமதிக்க வேண்டுமென்கிற நீண்டகால கோரிக்கை 11.10.2012 அன்று நடைபெற்ற உச்சநீதிமன்றத்தின் முழு நீதிமன்ற கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. தமிழ்நாடு அரசு 04.07.2014 நாளிட்ட கடிதத்தில் முன்னாள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அவர்களுக்கு உச்சநீதிமன்றத்தின் முந்தைய முடிவினை மறுபரிசீலனை செய்து தமிழ்நாடு அரசின் கோரிக்கையினை ஏற்க வேண்டுமென வலியுறுத்தியது. முன்னாள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி தனது 18.01.2016 நாளிட்ட கடிதத்தில் உச்சநீதிமன்றத்தின் முழு அமர்வு

தீவிர ஆலோசனைக்குப்பின், தமிழ்நாடு அரசின் கோரிக்கையினை ஏற்க மறுத்து உச்சநீதிமன்றத்தின் முந்தைய முடிவினை உறுதி செய்தது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அப்போதைய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மாண்புமிகு இந்தியப் பிரதமர் ஆகியோருக்கு 2022 மே மாதத்தில், சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரைக் கிளையில் தமிழ் மொழியினை அலுவல் மொழியாக, ஆங்கிலத்துடன் பயன்படுத்த அனுமதி அளிப்பதற்கான தக்க நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என கடிதம் மூலம் வலியுறுத்தியிருந்தார்.

அதற்கு மாண்புமிகு ஒன்றிய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு ஜுன், 2022 மாதத்தில் அனுப்பிய பதில் கடிதத்தில், அலுவல் மொழித் துறையின் பரிந்துரையின் அடிப்படையில், தமிழ் மொழியை சென்னை உயர்நீதிமன்றத்தின் அலுவல் மொழியாக அறிவிப்பதற்கான கோரிக்கையை மறுபரிசீலனை செய்யுமாறு அப்போதைய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அவர்களுக்கு தம்மால் மே, 2021-ல் கோரிக்கை வைத்து கடிதம் அனுப்பப்பட்டதெனவும், அதற்கான முடிவினை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

எனினும், தமிழ்நாடு அரசு இந்தக் கோரிக்கையை தொடர்ந்து, நினைவூட்டி ஒன்றிய அரசை வலியுறுத்தும்.

## 28. முடிவுரை

"ஒரு நிலையான கட்டமைப்பு இன்றி எந்த ஒரு நாகரீகமும் சாத்தியமில்லை. இந்த உலகில் நமது அன்றாட வாழ்க்கையை ஒழுங்குபடுத்த மற்றும் ஒருவருக்கொருவரிடையே ஏற்படக்கூடிய பிரச்சினைகளை களைவதில் முக்கிய நிலையான காரணி (stabilizing factor) சட்டமுறைமையே ஆகும். இது மரபு, பாரம்பரியம் இவைகளைக் காட்டிலும் நீடித்திருப்பதாகும்". சம உரிமை மற்றும் சமூக நீதியினை சரியாக முறைப்படுத்துவதன் மூலம் மட்டுமே அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி சாத்தியமாகும். நீதியின் ஆட்சி மற்றும் விரைவான நீதிப்பரிபாலனம் மூலமே சம உரிமை மற்றும் சமூக நீதியை நிலைநாட்ட முடியும்.

உயர்நீதிமன்றம் மற்றும் கீழமை நீதிமன்றங்களுடன் இணைந்து, நிதி ஆதாரம் மற்றும் உதவிகள் அளிப்பதன் மூலம் நீதித்துறைக்கு போதுமான உட்கட்டமைப்பு மற்றும் தேவையான நிர்வாக ஏற்பாடுகளை அளித்து, இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள நீதி, சுதந்திரம், சமத்துவம் ஆகியவை, அனைத்து குடிமக்களுக்கும் சென்றடைய இந்த அரசு வழிவகை செய்துள்ளது என உறுதி கூற விரும்புகிறேன்.

**எஸ். ரகுபதி**
**சட்டத்துறை அமைச்சர்**

## பிற்சேர்க்கை - I

## தமிழ்நாடு நீதித்துறையின் படிநிலை அமைப்பு

**முதன்மை இருப்பிட உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் மதுரையிலுள்ள சென்னை உயர்நீதிமன்றக் கிளை**

| *உரிமையியல் நீதிமன்றங்கள்* | | | *குற்றவியல் நீதிமன்றங்கள்* | |
|---|---|---|---|---|
| **சென்னை மாநகர்** | **வெளியூர்** | | **சென்னை மாநகர்** | **வெளியூர்** |
| முதன்மை நீதிபதி, மாநகர உரிமையியல் நீதிமன்றம் | மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள் | | முதன்மை நீதிபதி (அமர்வு நீதிமன்றம்) | மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள் |
| உதவி நீதிபதி, மாநகர உரிமையியல் நீதிமன்றம் | சார்பு நீதிமன்றங்கள் | | தலைமை பெருநகர குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்கள் | தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்கள் |
| சிறுவழக்குகள் நீதிமன்றங்கள் | மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் | | பெருநகர குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்கள் | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்கள் |
| | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்கள் | | | |

## பிற்சேர்க்கை-II

## சென்னை மாநகரில் செயல்பட்டு வரும் நீதிமன்றங்கள் / தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம்

| வ. எண் | நீதிமன்றங்களின் / தீர்ப்பாயங்களின் பெயர் | மாவட்ட நீதிபதி | | முதுநிலை உரிமையியல் நீதிபதி | | உரிமையியல் நீதிபதி / குற்றவியல் நீதித்துறை நடுவர் |
|---|---|---|---|---|---|---|
| | | மாவட்ட நீதிமன்றங்கள் | மத்திய குற்றப் புலனாய்வு துறையின் (CBI) வழக்குகளுக்கென தனி நீதிமன்றங்கள் | பெருநகர் குற்றவியல் நீதித்துறை நடுவர் | இதர வகை பிரிவு | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. | மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் | 18 | 6 | -- | 28 | 1 |
| 2. | சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் | 1 | -- | -- | 8 | 8 |
| 3. | பெருநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் | 2 | -- | 2 | 30@ | **9*** |
| 4. | தொழிலாளர் நல நீதிமன்றங்கள் | 4 | -- | -- | -- | -- |
| 5. | தொழில் தீர்ப்பாயம் | 1 | -- | -- | -- | -- |
| 6. | விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் | 1 | -- | -- | 1 | -- |
| 7. | அரசுப் போக்குவரத்து மேல்முறையீட்டு தீர்ப்பாயம் | 1 | -- | -- | -- | -- |
| 8. | இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் வரும் தனி நீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| 9. | தலைமை சொத்தாட்சியர் மற்றும் பொறுப்பு சொத்தாட்சியர் | 1 | -- | -- | -- | -- |
| 10. | துணை சொத்தாட்சியர் மற்றும் பொறுப்பு சொத்தாட்சியர் | -- | -- | -- | -- | 1 |
| 11. | குடும்ப நல நீதிமன்றங்கள் | 8 | -- | -- | -- | -- |
| 12. | மகளிர் நீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| 13. | தமிழ்நாடு முதலீட்டாளர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்டம், 1997 தனிநீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| 14. | போதைமருந்துகள் மற்றும் மனமயக்கப்பொருட்கள் தடுப்புச்சட்டம் கூடுதல் தனி நீதிமன்றங்கள் | 2 | -- | -- | -- | -- |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 15. | குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரிப்பதற்கான அமர்வு நீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| 16. | சென்னை மாநகராட்சி, சென்னை விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் | 1 | -- | -- | -- | -- |
| 17. | உறுப்பினர் செயலர், சட்டப்பணிகள் ஆணைக்குழு, சென்னை | 1 | -- | -- | -- | -- |
| 18. | செயலர், உயர்நீதிமன்ற சட்டப் பணிகள் குழு, சென்னை | 1 | -- | -- | -- | -- |
| 19. | செயலாளர், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, சென்னை | -- | -- | -- | 1 | -- |
| 20. | துணைச் செயலர், தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணையக்குழு | -- | -- | -- | 1 | -- |
| 21. | ஊழல் வழக்குகளை விசாரிப்பதற்கென சிறப்பு நீதிமன்றம் | -- | -- | -- | 5** | -- |
| 22. | மோட்டர் வாகன விபத்து இழப்பீடு வழக்குகள் சிறப்பு நீதிமன்றங்கள்/ பொருளாதர குற்றங்களுக்கான சிறப்பு நீதிமன்றங்கள் | -- | -- | -- | 2 | -- |
| 23. | நிரந்தர மக்கள் நீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| 24. | தலைவர், தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயம் | 1 | -- | -- | -- | -- |
| 25. | அமர்வு நீதிபதி, தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான குற்றவியல் வழக்குகளைவிசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் | 2 | -- | -- | 1 | -- |
| 26. | பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் (POCSO)-ன் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| 27. | வணிக நீதிமன்றங்கள் | 1 | -- | -- | -- | -- |
| | **மொத்தம்** | **52** | **6** | **2** | **77** | **19** |

**மொத்த நீதிமன்றங்களின் எண்ணிக்கை - 156 [ மாவட்ட நீதிபதிகள் - 58 ] [முதுநிலை உரிமையியல் நீதிபதிகள் - 79 ] [உரிமையியல் நீதிபதிகள் - 19]**

**@ 2 நடமாடும் நீதிமன்றங்கள் உட்பட**

*** குற்றவியல் நீதித்துறை நடுவர் தரத்தில் 5 விரைவு நீதிமன்றங்கள், 2 நில அபகரிப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள் மற்றும் ஒரு கூடுதல் மகளிர் நீதிமன்றம் உட்பட**

**** கள்ள நோட்டு வழக்கு / பரிசு சீட்டு மற்றும் பணசுழற்சி / மத்திய குற்றப்பிரிவு / மத்திய குற்றப் பிரிவு மற்றும் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வு துறை ஆகியவற்றுக்கான சிறப்பு நீதிமன்றம்**

பிற்சேர்க்கை –III

## மாநிலத்தில் செயல்படும் சார்நிலை நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம்

| வ. எண். | மாவட்டம் | மாவட்ட நீதிபதி | | | | முதுநிலை உரிமையியல் நீதிபதி | | | உரிமையியல் நீதிபதி | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மாவட்ட நீதிமன்றங்கள் | தொழிலாளர் நல நீதிமன்றங்கள் | குடும்ப நல நீதிமன்றங்கள்/ விரைவு நீதிமன்றங்கள் | மக்கள் நீதிமன்றம் | தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்கள் | சார்பு நீதிமன்றங்கள் | மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு | மாநில போக்குவரத்து மேல்முறையீட்டு தீர்ப்பாயம் | மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்கள் | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்கள் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| 1. | அரியலூர் | 2 | -- | 1 | 1 | 1 | 3 | 1 | -- | 4 | 4 | 1 |
| 2. | செங்கல்பட்டு | 2 | -- | 1 | -- | 1 | 5 | -- | -- | 5 | 9 | 5 |
| 3. | கோயம்புத்தூர் | 5 | 2 | 2 | 1 | 1 | 7 | 1 | 2 | 10 | 13 | 3 |
| 4. | கடலூர் | 4 | 1 | 1 | 1 | 1 | 9 | 1 | -- | 10 | 10 | 4 |
| 5. | தருமபுரி | 2 | -- | 1 | 1 | 1 | 5 | 1 | -- | 4 | 5 | 2 |
| 6. | திண்டுக்கல் | 2 | -- | 2# | 1 | 1 | 6 | 1 | -- | 6 | 7 | 4 |
| 7. | ஈரோடு | 5 | -- | 1 | 1 | 1 | 7 | 1 | 1 | 8 | 9 | 1 |
| 8. | கள்ளக்குறிச்சி | 2 | -- | -- | -- | 1 | 4 | -- | -- | 9 | 6 | -- |
| 9. | காஞ்சிபுரம் | 1 | 1 | 1# | 1 | 1 | 2 | 1 | -- | 3 | 3 | 1 |
| 10. | கன்னியாகுமரி | 3 | -- | 2# | 1 | 1 | 7 | 1 | -- | 9 | 8 | 1 |
| 11. | கரூர் | 1 | -- | 1 | 1 | 1 | 3 | 1 | -- | 4 | 4 | 2 |
| 12. | கிருஷ்ணகிரி | 3 | 1 | 1 | 1 | 1 | 6 | 1 | -- | 3 | 4 | 3 |
| 13. | மதுரை | 6 | 1 | 1 | 1 | 2 | 8 | 1 | 2 | 10 | 11 | 2 |
| 14. | மயிலாடுதுறை | 1 | -- | -- | -- | 1 | 3 | -- | -- | 3 | 3 | 1 |


| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15. | நாகப்பட்டினம் | 1 | -- | 1 | 1 | 1 | 1 | 1 | -- | 1 | 2 | 3 |
| 16. | நாமக்கல் | 3 | -- | 1 | 1 | 1 | 5 | -- | -- | 8 | 7 | -- |
| 17. | நீலகிரி | 1 | 1 | 1 | 1 | 1 | 3 | 1 | -- | 3 | 3 | 2 |
| 18. | பெரம்பலூர் | 1 | -- | 1 | 1 | 1 | 1 | 1 | -- | 2 | 2 | 2 |
| 19. | புதுக்கோட்டை | 2 | -- | 1 | 1 | 1 | 5 | 1 | -- | 3 | 4 | 9 |
| 20. | இராமநாதபுரம் | 2 | -- | 2# | 1 | 1 | 3 | 1 | -- | 4 | 5 | 3 |
| 21. | இராணிப்பேட்டை | 3 | -- | -- | -- | 1 | 2 | -- | -- | 2 | 4 | 3 |
| 22. | சேலம் | 5 | 1 | 2# | 1 | 1 | 7 | 1 | 1 | 10 | 13 | 3 |
| 23. | சிவகங்கை | 2 | -- | 1 | 1 | 1 | 3 | 1 | -- | 5 | 5 | 4 |
| 24. | தென்காசி | 1 | -- | -- | -- | 1 | 3 | -- | -- | 6 | 3 | 2 |
| 25. | தஞ்சாவூர் | 3 | 1 | 2# | 1 | 2 | 5 | 1 | -- | 6 | 7 | 4 |
| 26. | தேனி | 2 | -- | 2# | 1 | 1 | 3 | 1 | -- | 5 | 5 | -- |
| 27. | தூத்துக்குடி | 3 | -- | 1 | 1 | 1 | 4 | 1 | 1 | 6 | 10 | 2 |
| 28. | திருச்சிராப்பள்ளி | 3 | 1 | 1 | 1 | 1 | 9 | 1 | 1 | 11 | 10 | 2 |
| 29. | திருநெல்வேலி | 4 | 1 | 2# | 1 | 1 | 5 | 1 | 1 | 8 | 9 | 2 |
| 30. | திருப்பத்தூர் | 1 | -- | -- | -- | 1 | 3 | -- | -- | 4 | 5 | 1 |
| 31. | திருப்பூர் | 5 | -- | 1 | 1 | 1 | 7 | 1 | 1 | 7 | 10 | 2 |
| 32. | திருவள்ளூர் | 5 | -- | 1 | 1 | 1 | 7 | 1 | -- | 8 | 9 | 4 |
| 33. | திருவண்ணாமலை | 2 | -- | 2# | 1 | 1 | 7 | 1 | -- | 8 | 7 | 2 |
| 34. | திருவாரூர் | 1 | -- | 1 | 1 | 1 | 3 | 1 | -- | 3 | 4 | 4 |
| 35. | வேலூர் | 2 | 2 | 2# | 1 | 1 | 4 | 1 | 1 | 4 | 7 | -- |
| 36. | விழுப்புரம் | 3 | -- | 2# | 1 | 1 | 6 | 1 | -- | 6 | 5 | 3 |
| 37. | விருதுநகர் | 3 | -- | 1 | 1 | 1 | 6 | 1 | -- | 5 | 8 | 3 |
| **மொத்தம்** | | **97** | **13** | **43** | **31** | **39** | **177** | **31** | **11** | **213** | **240** | **90** |

# மாவட்ட நீதிபதி நிலையில் ஒரு விரைவு நீதிமன்றம் உட்பட

**பிற்சேர்க்கை –IV**

**சென்னை உயர்நீதிமன்றம், உயர் நீதிமன்ற மதுரைக் கிளை, மதுரை மற்றும் மாநிலத்தில் உள்ள மாவட்ட நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் தீர்வு மற்றும் நிலுவை விவரம்**

| வருடம் | உரிமையியல் வழக்குகள் | | | | குற்றவியல் வழக்குகள் | | | | ஆண்டின் இறுதியில் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளின் மொத்த நிலுவை விவரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆரம்ப இருப்பு | தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | தீர்ப்பு வழங்கப்பட்டவை | நிலுவை | ஆரம்ப இருப்பு | தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | தீர்ப்பு வழங்கப்பட்டவை | நிலுவை | |
| **சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயம்** | | | | | | | | | |
| 2019 | 183103 | 59714 | 72648 | 170169 | 20910 | 40470 | 41061 | 20319 | 190488 |
| 2020 | 170169 | 32204 | 38806 | 163567 | 20319 | 25613 | 26537 | 19395 | 182962 |
| 2021 | 163567 | 46400 | 59192 | 151203 | 19395 | 30002 | 33718 | 15679 | 166882 |
| 2022 | 151990 | 54715 | 71144 | 134796 | 15679 | 41084 | 40943 | 15820 | 150616 |
| 2023 | 133954 | 60084 | 73166 | 120708 | 13922 | 35969 | 37153 | 12738 | 133446 |
| **சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை** | | | | | | | | | |
| 2019 | 78194 | 35972 | 39347 | 74819 | 10797 | 22706 | 26088 | 7415 | 82234 |
| 2020 | 74819 | 25860 | 22058 | 78621 | 7415 | 18604 | 18185 | 7834 | 86455 |
| 2021 | 78621 | 32608 | 30698 | 82380 | 7834 | 24756 | 22636 | 10718 | 93098 |
| 2022 | 82380 | 38327 | 45548 | 73022 | 10718 | 27684 | 27568 | 10907 | 83929 |
| 2023 | 73022 | 42704 | 48581 | 67145 | 10907 | 27866 | 26443 | 12330 | 79475 |
| **மாநிலத்தில் உள்ள மாவட்ட நீதிமன்றங்கள்** | | | | | | | | | |
| 2019 | 616179 | 356201 | 323026 | 648084 | 468107 | 547719 | 526214 | 489600 | 1137684 |
| 2020 | 647805 | 219318 | 148649 | 717710 | 489527 | 338029 | 281118 | 546048 | 1263758 |
| 2021 | 717749 | 280456 | 242102 | 757473 | 546042 | 433293 | 404490 | 574471 | 1331944 |
| 2022 | 757354 | 310868 | 318254 | 749365 | 574481 | 552650 | 488651 | 638554 | 1387919 |
| 2023 | 749362 | 293685 | 320296 | 722020 | 638540 | 560993 | 545623 | 653078 | 1375098 |



குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர்
இணை இயக்குநர் (நிர்வாகம்)
இதழ் ஆசிரியர் (வெளியீடுகள்)
துணை இயக்குநர், சென்னை
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் – 2 2.சிறப்பு அரசு வழக்கு நடத்துநர் – 3 3.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 – 7 4.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2 – 13
துணை இயக்குநர், காஞ்சிபுரம்
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் – 2 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 – 4 3.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2 – 7
உதவி இயக்குநர், ஆலந்தூர்
அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2 – 2
உதவி இயக்குநர், திருவள்ளூர்
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் – 2 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 – 5 3.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2 – 5
துணை இயக்குநர், வேலூர்
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் – 2 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 – 5 3.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2 – 14
உதவி இயக்குநர், திருவண்ணா-மலை
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் – 2 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 – 3 3.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2 – 4
துணை இயக்குநர், கடலூர்
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் – 2 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 – 5 3.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2 – 9
உதவி இயக்குநர், விழுப்புரம்
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் – 1 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 – 2 3.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2 – 10
துணை இயக்குநர், சேலம்
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர்–2 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 – 3 3.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2 – 12
உதவி இயக்குநர், நாமக்கல்
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர்–1 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 – 1 3.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2 – 4
உதவி இயக்குநர், தர்மபுரி
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர்–2 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 – 4 3.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2 – 3
உதவி இயக்குநர், கிருஷ்ணகிரி
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர்–1 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 – 5 3.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2 – 3
துணை இயக்குநர், கோயம்புத்தூர்
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர்–2 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 – 3 3.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2 – 10
உதவி இயக்குநர், ஈரோடு
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர்–1 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 – 3 3.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2 – 8
உதவி இயக்குநர், நீலகிரி
1.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 – 3 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2 – 2
உதவி இயக்குநர், திருப்பூர்
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர்–1 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 – 2 3.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2 – 6
துணை இயக்குநர், திருச்சி
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் – 2 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 – 2 3.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2 – 13
உதவி இயக்குநர், புதுக்கோட்டை
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் – 1 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 – 2 3.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2 – 4
உதவி இயக்குநர், பெரம்பலூர்
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் – 2 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2 – 3
துணை இயக்குநர், தஞ்சாவூர்
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் – 2 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 – 4 3.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2 – 7
உதவி இயக்குநர், நாகப்பட்டினம்
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் – 3 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 – 4 3.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2 – 9
துணை இயக்குநர், மதுரை
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் – 3 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 – 7 3.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2 – 11
உதவி இயக்குநர், திண்டுக்கல்
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் – 1 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 – 3 3.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2 – 6
உதவி இயக்குநர், விருதுநகர்
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் – 2 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 – 4 3.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2 – 7
துணை இயக்குநர், சிவகங்கை
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் – 2 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 – 4 3.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2 – 3
உதவி இயக்குநர், ராமநாதபுரம்
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் – 1 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 – 3 3.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2 – 4
துணை இயக்குநர், திருநெல்வேலி
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் – 2 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 – 5 3.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2 – 9
உதவி இயக்குநர், தூத்துக்குடி
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் – 2 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 – 2 3.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2 – 7
உதவி இயக்குநர், நாகர்கோவில்
1. கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் – 2 2.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-1 – 2 3.அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2 – 6

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை – 600 001.